விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 285 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 13 சனிக்கிழமை (30.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## முல்லை நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல்

# யாழில் எதிர்வரும் 4ஆம் திகதி

# மனித சங்கிலிப் போராட்டம்

### தமிழ்க் கட்சிகள் அனைவருக்கும் அழைப்பு



*(யாழ்ப்பாணம்)* முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து யாழில் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

இதற்கு அனைவரையும் அணிதிரளுமாறு தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத் துள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

### நீதித்துறைக்கு உச்ச அச்சுறுத்தல்

சுமந்திரன் எம்.பி ஆவேசம்

3ஆம் பக்கம் பார்க்க

### நாட்டில் எஞ்சியிருந்த சட்ட ஆட்சிக்கே சவால்

மனோ எம்.பி டுவிட்

6ஆம் பக்கம் பார்க்க

நீதித்துறைக்கு அச்சுறுத்தல்

### கிளிநொச்சியில் திங்கள் கண்டனப் போராட்டம்

3ஆம் பக்கம் பார்க்க

## இராஜதந்திரிகளை சந்தித்த முல்லை நீதிபதி

### பதவி விலகல் குறித்து விசாரணை

### நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா கொழும்பில் இரண்டு இராஜதந்திரிகளை சந்தித் தார் எனத் தெரிவித்துள்ள நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நீதிபதியின் பதவி விலகல் குறித்து விசாரணை நடைபெறும் எனத் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் உடன் விசாரணை வேண்டும்

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட நீதி பதி ரி.சரவணராஜாவுக்கு ஏற் பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் உடனடியான விசா ரணைகளை முன்னெடுக்கு மாறு குற்றப்புலனாய்வு பிரிவை கோருவதாக இல ங்கை சட்டத்தரணி

15

### முல்லை நீதிபதிக்கு பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை

பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு வழங்கப் பட்ட பொலிஸ் பாது

15

### நீதித்துறையின் சுதந்திரம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது

அம்பிகா சற்குணநாதன்



(கொழும்பு)

நீதித்துறையின் அதிகாரம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர்

02

### உருக்குலைந்த நிலையில்

மன்னாரில் சடலம் கண்டெடுப்பு

(மன்னார்)

மன்னாரில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கண் டெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் முத்தரிப்

15

### சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தக்கூடாது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தக் கூடாது என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் தலைவரும்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நம்பிக்கையை நீதித்துறை இழந்துள்ளது

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

மக்களின் நம்பிக்கையை நீதித்துறை இழந்துள்ளது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகல் தொடர்பில்,

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குருந்தூர்மலை வழக்கில் உண்மையினை நிலைநாட்டுவதற்காக நடுநிலையுடனும் நீதியுடனும் வழக்கினை விசாரித்து வந்த நீதிபதி ரி.சரவணராஜா அவர்கள் தனது உயிருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் தொடர் அழுத்தங்கள் காரணமாக பதவியிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியமை என்பது அப்பட்டமாக இலங்கை நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மீது விழுந்த மற்றுமொரு கரும்புள்ளியாகும்.

குருந்தூர்மலை வழக்கில் தொல்பொருட் பிரதேசத்தில் நீதிமன்ற உத்தரவினை மீறி விகாரை கட்டுமானம் தொல்பொருள் பணிப்பாளரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதென அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளையாக்கியிருந்தது. அவ்வாறிருக்க இத்தீர்ப்பினை மாற்றியெழுத சட்டமா அதிபரினால் நீதிபதிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது எனும் செய்தி ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாகவிருந்தது.

குருந்தூர்மலை வழக்கு மற்றும் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரங்களில் நீதியை நிலைநாட்ட உறுதித்தன்மையோடிருந்த மாண்புமிகு நீதிபதி அவர்களை "தமிழ் நீதிபதி" என்று அடையாளமிட்டு பாராளுமன்றத்தில் விமர்சிக்கும் பொழுதே நீதித்துறையின் சுயாதீனம் விமர்சனத்திற்குள்ளாகி விட்டது.

அதேவேளை நீதிபதிக்குரிய காவல்த்துறைப் பாதுகாப்பு குறைக்கப்பட்டதோடு, அவர் புலனாய்வாளர்களால் கண்காணிக்கப்பட்டார் எனும் செய்தியானது அப்பட்டமாக நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்குள்ளாக்கியதோடு, நீதியையும் கேலிக்குரிய ஒன்றாக்கியுள்ளது.

இலங்கையில் நடந்தேறிய இச் சம்பவங்கள் நீதித்துறைச் சுயாதீனத்தில் ஒரு அங்கமான நீதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் கேள்வியினை தோற்றுவித்துள்ளதோடு, நீதிமன்றச் செயற்பாடுகளில் அரசியல் மற்றும் புற காரணிகளின் அழுத்தம் தொடர்ந்தும் இருக்கின்றமையினையும் உறுதிசெய்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இச் சம்பவம் ஒரு விடயத்தினை சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபடுத்துகின்றது, அதாவது தமிழ்மக்கள் மீது நடந்த இனப்படுகொலைக்கான நீதி இலங்கை நீதித்துறையால் சாத்தியப்படாது என்பதுவே ஆகும். தமிழ் மக்கள் உள்ளக விசாரணையையும் நீதிப் பொறிமுறையையும் நம்பமுடியாது என்பதை இது உறுதி செய்கின்றது. இனப்படுகொலைக்கான சர்வதேச நீதிக்கு இது மேலும் வலுச்சேர்க்கின்றது.

இங்கு தமிழ்மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்பை விட, நீதித்துறைக்கு பாரிய அநீதி நிகழ்ந்துள்ளது. இவ்வாறான சூழலில் தான் இலங்கை அரசாங்கம் உலக நம்பிக்கையை வென்றெடுக்கப் போகின்றது. இங்கு தனிப்பட்ட ரீதியில் அச்சுறுத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட நீதிபதி ரி.சரவணராஜா அவர்களிற்குரிய நீதியையும் நிவாரணத்தை வழங்கவும் நீதித்துறையில் சுயாதீனத்தன்மையினையும் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்துகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-7,33,104)



ஆயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் சமுத்திரத் தீர்த்தோற்சவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

# நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா

(நாகர்கோவில்)

வடமராட்சி கிழக்கு பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் 7ஆம் திருவிழாவான கப்பல் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவானது ஆலய வரலாற்றையும் ஆலயத்தின் மகிமையையும் முன்னொரு பொழுது எம்பெருமான் அடியார்களை சிறைமீட்ட பெருமையையும் விளக்கும் விழாவாகவும் நடைபெற்று வருகிறது.

இன்றிரவு 7ம் நாள் மகோற்சவந்தனில் விசேட பூஜைகளை தொடர்ந்து நாதஸ்வர மற்றும் நித்யஸ்ரீ அவர்களின் இசைக் கச்சேரி இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மறுநாள் அதிகாலை இரண்டு மணியளவில் வசந்த மண்டப பூசை இடம் பெற்று அதனைத் தொடர்ந்து நாகேஸ்வர பெருமான் வெளி வீதி உலாவரும் வேளையில் வடக்கு வீதியில் அதிகாலை 4.00 மணியளவில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கப்பல் ஆட்ட வைபவம் இடம்பெறும். (ம-7,60)

# பொது மக்களை பாதிக்கும் பயங்கரவாத சட்டம் தேவையற்றது

## விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டமோ அல்லது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமோ தேவையற்றது. மக்களைப் பாதிக்கும் இந்த கொடிய சட்டங்கள் சட்டப் புத்தகத்திலே இருக்கத் தேவையில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தன்னுடைய பதவிக்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாமென்ற பயம் ஜனாதிபதிக்கு இருக்கலாம் என்வும் கூறியுள்ளார்.

யாழில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

பயங்கரவாத தடைச்சட்டமோ அல்லது அதற்குப் பதிலாக கொண்டுவரப்படுகிற பயங்கரவாத எதிர்ப்பு சட்டமோ இலங்கைக்கு தேவையில்லை.

ஏனெனில் கடந்த காலத்தில் ஜே.வி.பி கிளர்ச்சியின் போது கடந்த 78 ஆம் ஆண்டு தற்காலிகமாக கொண்டு வரபட்டதே பயங்கரவாத தடைச்சட்டம். அது சில காலம் மட்டும் தான் எனக் கூறி தற்காலிகமாக கொண்டு வந்திருந்தாலும் 44 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கிறது.

ஆகவே பயங்கரவாத தடைச் சட்டமோ அல்லது எதிர்ப்புச் சட்டமோ தேவையற்றது. இந்தச் சட்டத்தால் தான் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றனர். எனவே இப்போது அதுதேவையற்றசட்டம்தான்.

எனினும் பயங்கரவாதம் நாட்டில் இருப்பதாக சொல்லி புதிய புதிய சட்டங்களை அரசிற்கு ஆதரவாக கொண்டு வருகின்றனர் என்றார். (ம-7)

**Romania வேலைவாய்ப்பு விசா**


**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7340)

**021 222 1265,076 250 0098**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் சின்னத்துரை
கருணானந்தன்

திதி : அமரபக்க பிரதமை

நீங்காத நினைவுகளால்
நீர்மல்கும் கண்களுடன்
மனைவி மருமக்கள் உற்றார்
உலகோர் ஏங்காத நாளில்லை
ஏன்பறந்தீர் எம்மைவிட்டு
ஆண்டு ஒன்று போனாலும்
இவ்வுலகில் நாம்வாழும் வரை
உங்கள் நினைவுகள் நீங்காமல்
நிலைத்திருக்கும்.

இல.61/1,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

(17290)

## நீதித்துறை...

அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குருந்தூர்மலை விவகாரத்தில் அவர் வழங்கிய கட்டளைகளுக்காக உயிர் அச்சுறுத்தலையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டதாக தெரிவித்து தனது பதவியை இராஜினாமா செய்துள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா சட்டமா அதிபர் தன்னை அழைத்து நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொண்டார் என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்துள்ளார்.

நீதிபதியை அழைப்பதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரமில்லை, நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு மாத்திரம் அதற்கான அதிகாரமுள்ளது.

ஆனால் சட்டமா அதிபர் உண்மையிலேயே அழைத்திருந்தால் அது நீதித்துறையின் சுதந்திரத்தினை குறைமதிப்பிற்கு உட்படுத்த முயலும் அரசாங்கத்தின் நோக்கத்தை அது வெளிப்படுத்துகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. என ருவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையின் இயங்குநிலையை உறுதிப்படுத்த அனைவரும் அணி திரளுங்கள் - சிறீதரன் எம்.பி அழைப்பு



(கிளிநொச்சி)

**நீதித்துறையின் இயங்குநிலையை உறுதிப்படுத்த ஒன்றிணைய வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் திங்கட்கிழமை போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா, தனது பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்படுமளவுக்கு, அவருக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை.9.30 மணிக்கு, கிளிநொச்சி பழைய கச்சேரி முன்பாக நடைபெறவுள்ள கண்டனப் போராட்டத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் மாவட்ட கிளை நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீதியின் செங்கோலை, அதிகாரத் தரப்புகளுக்கும் சிங்கள பேரினவாதத்திற்கும் சாதகமாக வளைக்க மறுத்ததற்காக ஒரு தமிழ் நீதிபதிக்கு இந்த நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், இந்த நாட்டின் சிறுபான்மை இனமாக அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஈழத்தமிழினத்தின் இருப்பு எவ்வளவு தூரம் சவாலுக்கு உட்படுத்தப்படும் என்பதுபற்றி சர்வதேச சமூகத்தின் கவனத்தைக் கோரும் வகையில் இக்கண்டனப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் அணி திரளுமாறு அழைத்து நிற்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-33)

## நீதித்துறை நேர்மையான முறையில் செயற்படுகிறதா?


### செல்வம் எம்.பி சந்தேகம்

(மன்னார்)

நாட்டில் நீதித்துறை நேர்மையான முறையில் செயற்படுகின்றதா என்ற கேள்வியெழுவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் முறையான தீர்ப்பை வழங்கிய நீதிபதி அச்சுறுத்தப்பட்டதை வன்மையாக கண்டிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதித்துறை என்பது நியாயமான வகையில்செயற்படவேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பாக உள்ளது எனவும் ஆனால் தற்போது தமிழ் நீதிபதிகளுக்கு நியாயமாக செயற்பட முடியாத நிலையேற்பட்டுள்ளதுடன் அவர்களை



அச்சுறுத்துகின்ற செயற்பாடுகளும் நாட்டில் இடம்பெறுவதாக விசனம் தெரிவித்துள்ளார்.

எனவே, நீதியமைச்சர் இந்த விடயத்தை ஆராய வேண்டும் எனவும், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் இராஜினாமாவில் அழுத்தம் உயிர் அச்சுறுத்தல் இருக்குமாக இருந்தால் நீதி அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என தெரிவித்தார். (நி-6)

## முல்லை நீதிபதி பதவி விலகல் நீதித்துறைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்

### சுமந்திரன் ஆவேசம்



(அராலி)

முதன்முதலாக எங்களது நாட்டின் சரித்திரத்திலே நீதிபதி ஒருவர் தன்னுடைய உயிர் பாதுகாப்புக்காக, அதிலும் தான் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் எழுந்திருக்கின்ற அச்சுறுத்தலின் காரணமாக வெளியேறியுள்ளமை நீதித்துறைக்கு ஏற்பட்டுள்ள ஒரு அச்சுறுத்தல் ஆகும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில்நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள சுயாதீன நிறுவனங்களை பாதுகாக்கின்ற கடப்பாடு எங்கள் அனைவருக்கும் இருக்கிறது. அப்படியான மிகவும் முக்கியமான சுயாதீனமான நிறுவனமாக நீதித்துறை உள்ளது. நீதித்துறையை பாதுகாக்கின்ற போது நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் செய்வதை நாங்கள் கண்டிக்க வேண்டும்.

நீதித்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்ற போது மூன்று விதங்களிலே ஒரு விதமாக அவர்கள் செயற்படலாம்.

ஒன்று அந்த அச்சுறுத்தலை கணக்கெடுக்காது தாங்கள் செய்ய வேண்டியதை செய்து விடலாம். இரண்டாவது அப்படியான அச்சுறுத்தல் வந்தால் அவர்கள் ராஜினாமா செய்து அதில் இருந்து விலகி விடுவார்கள்.

மூன்றாவதாக, நீதிபதிகள் அந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகி, அதற்கு அடங்கி தங்களுடைய நடத்தையை அல்லது தீர்ப்பை மாற்றி மற்றவர்களுடைய கைப்பொம்மைகளாக மாறி இயங்குவது. இவை அனைத்தும் தடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-6-104)

## நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்துகிறது

### அங்கஜன் ஆதங்கம்

(சாவகச்சேரி)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகல் நாட்டின் நீதித்துறை எத்தகைய சவால்களை சந்தித்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்து க்காட்டாகும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான நீதிமன்ற வழக்கின் தீர்ப்புகள் மற்றும் களவிஜயங்கள் மீதான அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் நீதிபதி அவர்களுக்கு விடுக்கப்பட்டு வந்துள்ளமை இதனூடாக வெளிப்பட்டுள்ளது. சுயாதீனமாக செயற்பட வேண்டிய நீதிக் கட்டமைப்பை ஆட்டங்காணச் செய்த குறித்த அச்சுறுத்தல் வாதிகளை ஜனநாயக மாண்பற்றவர்களாகவே கருத வேண்டியுள்ளது.

குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு சட்டமா அதிபர் மட்டத்திலிருந்தும், அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளமையானது மோசமான அதிகார துஷ்பிரயோகமாக அமைகிறது.

மேலும் நீதித்துறைக்கு காவலாக இருக்க வேண்டியவர்களே நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்குட்படுத்தும் போது, நாட்டின் எதிர்காலம் குறித்த அச்சம் மக்களிடம் உருவாகுகிறது.



ஏற்கனவே இந்நாட்டின் சட்டங்கள், வடக்கு - தெற்கு என்ற பேதங்களை பார்க்கின்றன என்ற குற்றச்சாட்டு உள்ள நிலையில் இந்த சம்பவமானது அக்குற்றச்சாட்டுகளை இன்னும் வலுச்சேர்த்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-30)

## நீதித்துறை மீதான நம்பிக்கை உடைக்கப்பட்டுள்ளது

### சந்திரகுமார் கண்டனம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா தனக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ள செய்தி இலங்கையின் நீதித்துறைக்கு கழுவ முடியாத கறையாக படிந்துள்ளதுடன் நீதித்துறை மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை உடைக்கப்பட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிலைமை இலங்கை நீதித்துறைக்கு மிகப் பெரும் அவமானம் என்பதோடு, தமிழ் மக்கள் இலங்கையின் நீதித்துறை மீது முழுமையான நம்பிக்கை இழக்கும் நிலைமைக்கு இட்டுச் செல்லும் சம்பவமாகவும் காணப்படுகிறது.

எனவே இவ்வாறான நிலைமைகள் இனியும் நாட்டில் இடம்பெறாத வகையில் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதோடு, நீதித்துறை பணியாளர்களின் சுதந்திரமான பணிகளுக்கும் அச்சுறுத்தல் இல்லாத சூழல் உருவாக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸி அணி வீரர்கள் அறிவிப்பு



அவுஸ்திரேலியாவின் உலகக் கிண்ண அணியில் காயம் அடைந்த அஷ்டன் ஆகருக்குப் பதிலாக மார்னஸ் லபுசாக்னே அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண தொடருக்கான அவுஸ்திரேலியா யின் 15 பேர் கொண்ட அணியில் இடம்பெற்றிருந்த அஷ்டன் ஆகர் காயம் அடைந்த நிலையில் பதிலாக மார்னஸ் லபுசாக்னே அணிக்குள் இணைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி பெயரிடப்பட்ட அணியில் இரண்டு முன்னணி சுழற் பந்து வீச்சாளர்களில் ஒருவராக இடது கை சுழற்பந்து வீச்சாளர் ஆகர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தென்னாபிரிக்கா சுற்றுப் பயணத்தில் பின்காலில் ஏற்பட்ட காயம் மற்றும் குழந்தை பிறந்ததற்காக வீடு திரும்பிய அவர் இந்தியா வில் நடந்த தொடரையும் தவறவிட்டார்.

இதனை தொடர்ந்து தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் தொடருக்காக அணிக்குள் உள்வாங்கப் பட மார்னஸ் லபுகாக்னே ஐந்து போட்டிகளில் 70.75 சராசரி யோடு 283 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

பட் கம்மின்ஸ் தலை மையிலான அவுஸ்திரேலிய அணியில் மிட்செல் மார்ஷ், டேவிட் வோர்னர், ஸ்டீவ் ஸ்மித், மார்னஸ் லபுஷா க்னே, டிராவிஸ்ஹெட், கமரூன்கிறீன், சீன்அபோட், அலெக்ஸ் கேரி, ஜோஷ் ஹேசில்வுட், ஜோஷ் இங்கிலிஸ், கிளென் மக்ஸ்வெல், மிட்செல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டோனிஸ், அடம் சாம்பா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (5-6)

## இந்திய அணியுடன் இணைந்த அஸ்வின்

உலகக் கிண்ண 2023 கிரிக்கெட் தொடர் அடுத்த வாரம் துவங்குகிறது. இந்தியாவில் நடைபெற இருக்கும் உலகக் கிண்ண தொடருக்கான இந்தியா அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில், உலகக் கிண்ண 2023 தொடருக்கான இந்திய அணியில் திடீர் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது.

முன்னதாக இந்திய அணியில் சேர்க்கப்பட்டு இருந்த அக்சர்பட்டேல் காயம் காரணமாக விலகிய நிலையில் அவருக்கு பதிலாக தற் போது அஸ்வின் சேர்க் கப்பட்டு இருக்கிறார்.

முன்னதாக உலகக் கிண்ண தொடருக்கான இந்திய அணியில் அஸ்வின் சேர்க்கப்படாதது குறித்து பலர் ஏமாற்றம் தெரிவித்து இருந்தனர்.

தற்போது இந்திய அணி யில் அஸ்வின் சேர்க்கப்பட்டு இருப்பது அவரின் இரசிகர் கள் மட்டுமின்றி இந்திய அணி ரசிகர்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

2011, 2015 என இரு உலகக் கிண்ண தொடர்களில் அஸ்வின் விளையாடி இருக்கும் நிலையில் தற்போது 2023 உலகக் கிண்ண தொடரில் களமிறங்குவதன் மூலம் மூன்றாவது முறையாக அவர் விளையாட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## உலகக்கிண்ண போட்டியில் விளையாட ஆர்வமாக உள்ளோம் - ரோகித் சர்மா


ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் நடந்த அவுஸ்தி ரேலியாவுக்கு எதிரான 3 ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டியில் இந்தியா தோல்வி அடைந்தது. முதல் 2 ஆட்டங்களில் வென்ற தால் தொடரை 2-1 என்ற கணக்கில் இந்தியா கை ப்பற்றியது.

இப்போட்டிக்கு பிறகு இந் திய கப்டன் ரோகித் சர்மா கூறியதாவது,

நான் பார்முக்கு திரும்பியதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. கடந்த 8 ஒரு நாள் போட்டிகளில் வெவ்வேறு சூழ் நிலைகளில் நாங்கள் நன்றாக விளையாடினோம். வெவ்வேறு சமயங்களில் சவாலுக்கு ஆளானோம். அந்த சவாலை ஏற்றுக் கொண்டு விளையாடினோம். துரதிஷ்டவசமாக நாங்கள் வெற்றி பெறவில்லை.

உலக கிண்ணத்துக்காக 15 பேர் கொண்ட அணியை பற்றி பேசும்போது, எங்களுக்கு என்ன தேவை, யார் சரியாக இருப்பார்கள் என் பதில் தெளிவாக இருக்கி றோம். நாங்கள் குழப்பம டையவில்லை. நாங்கள் எதை நோக்கி செல்கிறோம் என்பது எங்களுக்கு தெரி யும்" என்றார். (5-6)

# வாலிபர் கிண்ண உதைபந்தாட்ட அரையிறுதி போட்டிகள் நாளை ஆரம்பம்



யங்ஹென்றிஸ்



ஆனைக்கோட்டை யூனியன்



பாடும்மீன்



சென்மேரிஸ்

இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 32 அணிகளை உள்ளடக்கி நடத்தப்படும், "வாலிபர் கிண்ணம்" உதைபந்தாட்டத் தொடர் அரையிறுதிப் போட்டிகள் நாளை ஆரம்ப மாகவுள்ளது.

அந்த வகையில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு முதலாவது அரையிறுதியில் இளவாலை யங்ஹென்றிசியன் அணியை எதிர் ஆனைக் கோட்டை யூனியன் அணி மோத இருப்பதுடன் 3 ஆம் திகதி செவ்வாய்கிழமை இரவு 7.30 மணிக்கு குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து நாவந்துறை சென். மேரிஸ் அணி மோத உள்ளது.

அனைத்து உதைபந்தாட்ட ரசிகர்களையும் மின்னொளியில் ஆட்டங்களை கான வருமாறு ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வடக்கு–கிழக்கில்

# நீதிபதிகள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி உள்ளடங்கலாக நீதித் துறையிலே தான் வகித்த அனைத்துப் பதவிகளையும் அரசியல் ரீதியான அழுத்தங்களின் காரணமாகவும் உயிர் அச்சுறுத்தலின் காரணமாகவும் இர்ராஜினாமா செய்து விட்டு, இலங்கையிலே வாழ முடியாத நிலையில் நாட்டை விட்டு வெளியேறி இருக்கிறார். நீதிபதி ரீ. சரவணராஜா. இன்று நீதித்துறை எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி ஜனநாயகத்தினையும் நீதியினையும் மதிக்கும் அனைவருக்கும் அதிர்ச்சி அளிப்பதுடன், இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனத் தன்மை எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தெளிவாக வெளிக்காட்டுகிறது என யாழ்.பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் தெரிவித்துள்ளது.நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிபதி சரவணராஜா குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்தினால் சிங்கள பௌத்தத் தேசியவாத நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட மீறல்களை வெளிப்படையாக கண்டனம் செய்து, நியாயமான தீர்ப்புக்களை வழங்கிய ஒரு நீதிபதி. தமிழ் மக்களின் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு அரசினால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட போதெல்லாம் மக்களின் நினைவேந்தல் உரிமையினை உறுதிப்படுத்தித் தீர்ப்புக்களை வெளியிட்ட ஒருவர்.

இவ்வாறான நேர்மையும் துணிச்சலும் மிக்க நீதிபதியினை அச்சுறுத்தும் வகையில் தென்னிலங்கையில் உள்ள தீவிர சிங்கள தேசியவாத சக்திகள் வெறுப்புப் பிரசாரங்களை அண்மையிலே முன்னெடுத்திருந்தனர்.

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர இந்த நீதிபதியினை மிகவும் மோசமான முறையில் விமர்சித்தும் அச்சுறுத்தியும் இருந்தார்.சட்டத்திற்கு அமையத் தன் கடமைகளைச் செய்த ஒரு நீதிபதிக்கே இந்த நிலைமை ஏற்படின், நாளாந்தம் இனவாத செயன்முறைகளை எதிர்கொண்டு போராடும் நாட்டின் சிறுபான்மை சமூகங்களின் நிலைமை என்ன? என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது.

நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக இடம்பெற்ற வெறுப்புப் பிரசாரங்கள், அச்சுறுத்தல்கள், அவரது பணியினை அவர் சுயாதீனமாகச் செய்வதனை தடுக்கும் வகையில் அவரின் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் அனைத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த முயற்சிகளில் ஈடுபட்ட அனைவரும் நீதிபதி சரவணராஜா இன்று எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பிலே பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படல் வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோருகிறது.

வடக்குக் கிழக்கின் நீதிக் கட்டமைப்பு இன்று அச்சுறுத்தல்களையும் வடக்குக் கிழக்கின் அழுத்தங்களையும் சந்தித்து வருகிறது. வடக்குக் கிழக்கில் பணியாற்றும் நீதிபதிகள் அச்சுறுத்தப்படுவதற்கு அடிப்படையான காரணமாக அமைவது இலங்கை அரசினது சிங்கள-பௌத்த நிகழ்ச்சி நிரலே. தமிழ், முஸ்லிம் மக்கள், பெரும்பான்மையாக வாழும் இந்தப் பிரதேசத்தினை சிங்கள பௌத்த மயமாக்குவதும் தமிழ் மக்களின் நினைவேந்தல் செயன்முறைகளை வலிந்து தடுத்தலும் இந்த நிகழ்ச்சி நிரலின் பகுதிகளாகும்.

இந்த நிகழ்ச்சி நிரலிற்குத் துணை போகாத நீதிபதிகளும் ஏனைய அரச ஊழியர்களும் பல்வேறு வழிகளில் அச்சுறுத்தலுக்கும் அழுத்தத்துக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகின்றனர். சிங்கள பௌத்த மேலாதிக்கம் ஒழியும் வரை வடக்குக் கிழக்கிலே நீதித் துறையும் சரி ஏனைய நிர்வாகத் துறைகளும் சரி பாதிப்பினையே எதிர்கொள்ளும்.நாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடி ஒன்றிலே அகப்பட்டிருக்கும் இன்றைய நிலையில், இனவாதத்தினைக் கையில் எடுக்கும் அரசியல் சக்திகள் மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் இருந்து அவர்களைத் திசைதிருப்பி விட முயற்சி செய்கின்றனர். நீதிபதி சரவணராஜா போன்றோர் இலக்கு வைக்கப்படுவது இந்த இனவாத முயற்சியின் ஒரு வடிவமே.

அழுத்தத்துக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் நீதிபதி சரவணராஜா மீளவும் தன் பதவிக்குத் திரும்பி, சுயாதீனமான முறையில் தனது கடமைகளைச் செய்யக்கூடிய நிலையினை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும். வடக்குக் கிழக்கிலே நீதித்துறையும் நீதிபதிகளும் எதிர்கொள்ளும் அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இந்த அழுத்தங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அடிநாதமாக இருக்கும் அரசாங்கத்தினதும் சிங்கள பௌத்த மேலாண்மைவாத சக்திகளினதும் இனவாதம் முறியடிக்கப்பட வேண்டும். இந்த நோக்கங்களுக்காக நாட்டு மக்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டியது அவசியம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகிறது. (நி-5)

## இராசிபலன்

30.09.2023
புரட்டாதி 13, சனிக்கிழமை
பிரதமை பிற்பகல் 2.34 மணிவரை

ரேவதி பின்னிரவு 12.20 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
மஹாளய பக்ஷாரம்பம்

சந்திராஷ்டமம்: மகம் ,பூரம்

வளவன்

**மேஷம்** தொழில்ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சயனசுகக் குறைவான நாள், ரோகபயமுண்டு.

**கடகம்** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உடல்நலம் சீராகும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும், உற்சாகமான நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாடு சிறப்பினைத்தரும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** பிரியமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** எடுத்த காரியங்களை பாதியில் விட்டுவிடுவீர்கள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், உறவினர்கள் நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்

**கன்னி** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், விலகிச் செல்லுபவர்கள் விரும்பி வந்து இணையலாம், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**மீனம்** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

மனித சமுதாயத்தின் [illegible] ஆரம்பமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுண்ணி பூச்சியினால் பரவும் கொடிய தோல் நோய்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டின் வறண்ட பிரதேசத்தில் மக்களின் வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் வெலிமஸ்ஸ என்ற ஒட்டுண்ணி பூச்சியினால் பரவும் கொடிய தோல் நோய் தொடர்பில் சுகாதார திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இரவு மற்றும் மாலை நேரங்களில் உடலில் வெளிப்படும் பகுதிகளை கடிக்கும் இந்தப் பூச்சி, தண்ணீர் தேங்கும் குளிர்ந்த இடங்களில் முட்டையிடும்.

எந்த வலி, புண் அல்லது கட்டி, மணல் ஈ கடி என்று சந்தேகிக்கப்படும் இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற வேண்டும் என்றும் இந்த நோய்க்கு பல சிகிச்சை முறைகள் உள்ளன.

பொதுவாக ஹசலக்க மற்றும் மஹியங்கனை பிரதேசங்களில் காணப்படும் இந்த பூச்சி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இனங் காணப்படலாம் என சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

# நாட்டில் எஞ்சி இருந்த சட்ட ஆட்சிக்கும் நேரடி சவால்

## மனோ எம்.பி டுவிட்



(கொழும்பு)

நாட்டில் எஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச சட்ட ஆட்சிக்கும் நேரடி சவால் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சட்டத்தின் ஆட்சி என்பது அதிகார பகிர்வு, பொறுப்புக் கூறல் என்பன போன்ற மாற்றுக் கருத்துகள் கொண்ட விடயமல்ல.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் உயிருக்கு அச்சுறுத்தல் என்பது நாட்டில் எஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச சட்ட ஆட்சிக்கும் நேரடி சவால். ஜனாதிபதி ரணிலுடன் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத் தினமும் பதிலளிக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# ஆடு, மாடுகளை இறைச்சிக்காக இறக்குமதி செய்யத் திட்டம்

(கொழும்பு)

நாட்டில் பால் மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதற்காக பொருத்தமான இரண்டு வகை மாடுகள் மற்றும் ஆடுகளை அறிமுகப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு குறித்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பால் மற்றும் இறைச்சி உற்பத்திக்காக கால்நடைகளை இறக்குமதி செய்தாலும் நாட்டின் காலநிலை அவற்றுக்கு ஏற்புடையதல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.


இதனால் அவை ஏனைய நோய்களுக்கு உள்ளாகி உயிரிழப்பதாகவும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5)


# மரண அறிவித்தல்

**அமரர். கணபதிப்பிள்ளை சர்வேஸ்வரசெவ்வேள்**

(முன்னாள் முகாமையாளர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

அன்னை மடியில்-29.10.1957 இறைவன் அடியில்-29.09.2023



கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மாவடி வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சர்வேஸ்வரசெவ்வேள் அவர்கள் 29.09.2023 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் (முன்னாள் சின்மய பாரதி ஆசிரியை) அன்புக் கணவரும் வஜனியின் பாசமிகு தந்தையும் மற்றும் காலஞ்சென்ற சர்வேஸ்வரரூபி, சர்வேஸ்வரஜோய், சர்வேஸ்வரலலிதா, சர்வேஸ்வர விமோசனம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மற்றும் யோகேஸ்வரி, முருகமூர்த்தி, கந்தசாமி, பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் மற்றும் சோதிலிங்கம், கௌரி ஆகியோரின் சகலனும் மற்றும் காலஞ்சென்றவர்களான சர்வானந்தம், கமலானந்தன், கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகலனும் மற்றும் சர்மிளா(லண்டன்), சர்மிலன் (லண்டன்), சர்வன்(லண்டன்), ஸ்ரீவத்சலனி(கனடா), சுலக்சனா, ஜனேசன், உமாஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை 01.10.2023 அன்று அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் குடும்பத்தினர்.
தொடர்புகளிற்கு-
076 494 1987,
075 040 3159.

மாவடி வீதி, சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(17235)


# பரீட்சையைப் பிற்போடுவதால் கல்வித்துறையில் நெருக்கடி

## நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட்டால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டப் படிப்புகளுக்கான வயது வரம்பு மீறப்பட்டு இலங்கை கல்வியில் நீண்டகால நெருக்கடி ஏற்படலாம் என கல்வி நிபுணர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளனர்.

பரீட்சைகளை ஒத்தி வைப்பது குறித்து முடிவு செய்யும் போது அந்த விடயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கல்வி நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை ஜனவரி 2024 வரை ஒத்திவைக்கப்பட்டால் அந்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறவிருந்த சாதாரணதரப் பரீட்சை 2024 மே மற்றும் ஜூன் வரை ஒத்திவைக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் 2023 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதில் தாமதமாகும். சாதாரண தரப்பரீட்சை ஜூலை 2024 வரை தாமதமாகும். பின்னர் 2024 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களுக்கு இம்முறை போன்று கூடுதல் நேரம் வழங்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

அப்படியானால், 2024 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை மீண்டும் டிசெம்பர் 2024 அல்லது ஜனவரி 2025 வரை ஒத்திவைக்கப்படும் என்றும் இது இலங்கைக் கல்வியில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள பின்னடைவை சரிசெய்வது மேலும் தாமதமாகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பரீட்சைகள் ஒத்திவைப்பு, பாடசாலை தவணைகள் தாமதம், பாடசாலைகளில் மாணவர் அனுமதி, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்கள் கூடுதல் காலம் பாடசாலைகளில் தங்க வேண்டிய நிலை, இதனால் வகுப்பறைகளில் இடப்பிரச்சினை, உயர்தரத்திற்கான அனுமதி தாமதம், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கான புலமைப்பரிசில் அனுமதி இழப்பு, அரசதுறை ஆட்சேர்ப்பு தாமதம் போன்ற நீண்டகால விளைவுகளை சந்திக்க நேரிடும் என கல்வி நிபுணர்கள் ஜனாதிபதி ரணிலிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி தடைகள் அடுத்த மாதத்திற்குள் நீக்கப்படும்

## ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதித் தடைகள் அடுத்த மாதத்திற்குள் நீக்கப்படும் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எதிர்பார்த்த அளவு பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரித்ததன் பின்னர், வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

திறந்த பொருளாதார கொள்கைக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்குவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாட்டின் அந்நியச் செலாவணியின் கையிருப்பை கருத்திற்கொண்டே, இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்துத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

தற்போதைய நிலைமையில் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்துவதற்கான சந்தர்ப்பம் இல்லை.

எதிர்வரும் காலப்பகுதியில் அந்நியச் செலாவணியின் கையிருப்பின் அடிப்படையில் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் என பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (நி-5)

# பொருளாதார பாதிப்பை காரணம் காட்டி தேர்தலை பிற்போட முடியாது-ரஞ்சித் பண்டார

(கொழும்பு)

அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்த அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என பொதுஜன பெரமுனவின் பொருளாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி விடயம் தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்.

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை 2019 ஆம் ஆண்டு தோற்றுவித்தார்கள். எமது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தவறான தீர்மானங்களினால் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டதால் அரசியல் ரீதியில் நெருக்கடிகள் தோற்றம் பெற்று பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

பொருளாதார பாதிப்பை கொண்டு ஒரு தரப்பினர் நாட்டை பலவீனப்படுத்த முயற்சித்தார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறைக்கு சாத்தியமான எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் தெரிவு செய்துள்ளோம் என்பதற்காக அவர் எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் எம்மால் இணக்கம் தெரிவிக்க முடியாது. தவறான தீர்மானங்களுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது.

அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. நாடு தற்போது ஸ்திரமடைந்துள்ளது.

ஆகவே அரசாங்கம் உடனடியாக. தேர்தலை நடத்த வேண்டும். பொருளாதார பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது.

மக்களாணையை தெரிந்து கொள்ள அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்துமாறு அரச தலைவர்களுக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு மின்சார சபை கோரிக்கை விடுப்பு

(கொழும்பு)

மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இவ்வருடம் எதிர்பார்த்த அளவு நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போனமையினால், மின்சார உற்பத்திக்கு கூடுதல் செலவு ஏற்பட்டதாக அதன் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த வருடம் 4500 மெகாவாட் நீர் மின் திறன் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் 3750 மெகாவாட் நீர் மின் திறனையே இவ்வாண்டு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய, அனல் மின் நிலையங்களில் இருந்து 750 மெகாவாட் நீர் மின் திறனை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாகவும் அதற்காக அதிக நிதியை செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் கூடுதல் தொகையை ஈடு செய்யும் வகையில், இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்தார். (நி-5)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -18, 2ஆம் குறுக்குத் தெரு வீதியில் 27 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கணபதிப்பிள்ளை செல்லையா என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கிழக்கு இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த கந்தசாமி பூபாலசிங்கமும் மனைவி சுந்தரலட்சுமி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு செல்லையா கணபதிப்பிள்ளை முகதாவில் 01.08.2013ஆம் திகதியிட்ட 2926ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கந்தசாமி வரச்செல்வத்திற்கும் மனைவி மகேஸ்வரிக்கும் வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குழி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை "புளியடி வளவு" நிலப்பரப்பு ஒன்று (1) குழி இரண்டு தசம் எட்டு ஒன்பது (2.89) இவ்வாதனத்தை நில அளவையாளர் பி.தனராசா அவர்களால் 2012 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16 ஆம் திகதியன்று அளந்து வரையப்பட்ட 3393 ஆம் இலக்க அளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டியுள்ளார். இவ்வாதனத்திற்கான எல்லைகள்,

வடக்கு :- நடராசா மனைவி பாலகுனேஸ்வரிக்குரிய ஆதனம்.
கிழக்கு :- 2 ஆம் குறுக்குத் தெரு.
தெற்கு :- ஒழுங்கை.
மேற்கு :- தங்கவேலு மனைவி யோகேஸ்வரிக்குரிய ஆதனம்
மேலே சொல்லப்பட்ட நான்கு எல்லைகளும் சேர்ந்த நிலம் பயிர் வகைகளடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை கந்தசாமி வரச்செல்வமும் மனைவி மகேஸ்வரியும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி வரச்செல்வமும் மனைவி மகேஸ்வரியும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7347)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>உயரம்: 5' 7<br>தகைமை/தொழில்:Hospital management chef<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு. (1. 2 வயது கூடியவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்)<br>தொ.இ: B/13992 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா: 40<br>உயரம்: 5' 6<br>தகைமை/தொழில்: BCA (India)<br>விவாகரத்தானவர் மணமகள்<br>எதிர்பார்ப்பு: படித்தவர்/ விவாகரத்தான்வர்<br>தொ.இ:G/13625 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 7 இல் செவ்வாய்<br>கி.பா: 30 1/4<br>உயரம்: 5' 7<br>தகைமை/தொழில்: A/L (Swiss)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13993 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5' 3<br>தகைமை/தொழில்:IT (Germany)<br>எதிர்பார்ப்பு: IT படித்த மணமகள்<br>தொ.இ: G/12553 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : மூலம்<br>கி.பா: 11 1/2<br>உயரம்: 5' 8<br>தகைமை/தொழில் Networking in IT high level post in Airport (Canada)<br>எதிர்பார்ப்பு : படித்த பெண்<br>தொ.இ: B/13994 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் 7 இல் சூரி செவ்வாய்<br>கி.பா: 72<br>உயரம்: 5' 2<br>தகைமை/தொழில்: BBA, Do<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்/ வெளிநாடு<br>தொ.இ:G/9488 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 14 1/2<br>உயரம் : 5' 6<br>தகைமை/ தொழில்: MSc in contruction Qs (London)<br>எதிர்பார்ப்பு: படித்த PR உள்ள பெண்<br>தொ.இ: B/13995 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 29ரரத்ஜம 3/4<br>உயரம்: 5' 2<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி/ அரச, தனியார் தொழில்<br>தொ.இ:G/11778 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 211.

### நல்லதே நினையுங்கள் நல்லதே நடக்கும்

ஒரு நாள் ஒரு அப்பா, இரண்டு கிண்ணங்களில் கஞ்சி சமைத்து சாப்பாட்டு மேசை மேல் வைத்தார். ஒரு கிண்ணத்தில் கஞ்சியின் மேலே ஒரு முட்டை. அடுத்த கிண்ணத்தில் கஞ்சியின் மேலே முட்டை இல்லை.

அப்பா என்னிடம் கேட்டார். உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ எடுத்துக் கொள். நான் முட்டை இருந்த கஞ்சிக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன்.

என்னுடைய புத்திசாலித்தனமான முடிவுக்காக என்னை நானே பாராட்டிக் கொண்டேன்.

அப்பா சாப்பிட ஆரம்பித்த போது எனக்கு ஆச்சரியம். அவருடைய கிண்ணத்தில் கஞ்சிக்கு அடியில் இரண்டு முட்டைகள். அவசரப்பட்டு நான் எடுத்த முடிவுக்காக வருத்தப்பட்டேன்.

அப்பா மென்மையாகச் சிரித்தபடி சொன்னார். ஒன்றை நினைவில் வைத்துக் கொள். உன் கண்கள் பார்ப்பது உண்மை இல்லாமல் போகலாம்.

அடுத்தநாளும் இரண்டு பெரிய கிண்ணங்களில் கஞ்சி சமைத்துச் சாப்பாட்டு மேசையில் வைத்தார். முதல் நாளைப் போலவே ஒரு கிண்ணத்தில் ஒரு முட்டை இருந்தது. இன்னொன்றில் முட்டை இல்லை. அப்பா என்னிடம் கேட்டார். உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ நீயே எடுத்துக் கொள்'

இந்த முறை நான் கொஞ்சம் புத்திசாலித்தனமாக யோசித்தேன். முட்டை வைக்கப்படாத கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன்.

அன்றைக்கும் எனக்கு ஆச்சரியம். கிண்ணத்துக்குள் அடிவரை துழாவிப் பார்த்தும் ஒரு முட்டை கூடக் கிடைக்கவில்லை. அன்றைக்கும் அப்பா சிரித்தபடி சொன்னார்.

"எப்போதும் அனுபவங்களின் அடிப்படையில் எதையும் நம்பக்கூடாது. ஏன் என்றால் சில நேரங்களில் வாழ்க்கை உன்னை ஏமாற்றக் கூடும். இதை ஒரு பாடமாக எடுத்துக் கொள்."

மூன்றாவது நாள். மறுபடியும் இரு கிண்ணங்களில் கஞ்சி சமைத்து மேஜையின் மேல் வைத்தார். வழக்கம் போல ஒரு கிண்ணத்தில் முட்டை. மற்றொன்றில் இல்லை.

தோற்றது போல ஒரு தடுமாற்றம்.

அப்பா கேட்டார் "நீயே தேர்ந்து எடுத்துக் கொள்." இந்த முறை அவசரப்பட்டு கிண்ணத்தை எடுக்காமல் பொறுமையாக அவரிடம் சொன்னேன்.

அப்பா நீங்கள் தான் இந்தக் குடும்பத்தின் தலைவர். நீங்கள் தான் நம் குடும்பத்துக்காக உழைக்கிறீர்கள். எனவே முதலில் நீங்கள் கிண்ணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மற்றதை நான் எடுத்துக் கொள்கிறேன்' என்றேன்.

அவர் முட்டை இருந்த கஞ்சிக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டார். நான் முட்டை இல்லாத கஞ்சியைச் சாப்பிட ஆரம்பித்தேன்.

அன்றைக்கும் எனக்கு ஆச்சரியம். என் கிண்ணத்தின் அடியில் இரண்டு முட்டைகள் இருந்தன. அப்பா என்னைப் பார்த்துச் சொன்னார்.

நினைவில் வைத்துக் கொள்.

எல்லாம் தொலைந்தது போல் தெரிந்தாலும் அதெல்லாம் ஒரு மாயை. மற்றவர்களுக்கு நீ நல்லது நினைக்கும் போது எல்லாம் உனக்கும் நல்லதே நடக்கும்.

## பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்

- 52 பேர் உயிரிழப்பு
- 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பலுச்சிஸ் தானில் மசூதியொன்றின் அருகில் இடம்பெற்ற தற் கொலை குண்டு தாக்குதலில் 52 பேர் உயிரிழந்துள்ளதுடன் 50 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

முகமது நபியின் பிறந்தநாள் கொண்டாட்டங்களிற்காக பெரு மளவு மக்கள் திரண்டி ருந்தவேளை இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தற்கொலை குண்டுத்தாக் குதலே இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்குதலை தொடர்ந்து அந்த பகுதியில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (நி-5)

## இந்தியா-கனடா இடையேயான நட்புறவை சீர்குலைக்க பாகிஸ்தானின் சதித்திட்டம்

(டில்லி)

பாகிஸ்தானின் உளவு அமைப்பான இன்டர் சர்வீசஸ் இன்டலி ஜெஸ்ன்ஸ் (ஐ.எஸ்.ஐ.) கனடாவில் கொலை செய்ததற்கு மூளையாக செயற்பட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

கனடாவில் சீக்கிய மதத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த கொலையில் இந்திய ஏஜெண்டுகள் தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சுமத்தினார். ஆனால் அவரது குற்றச் சாட்டுக்கு இந்தியா மறுப்பு தெரிவித்தது.

கனடாவின் குற்றச்சாட்டுக்கு ஆதாரங்களை இந்தியாவிடம் வழங்கவில்லை. நிஜார் கொலையால் இந்தியா-கனடா இடையே விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தை மேலும் தீவிரமாக்கும் வகையில் கனடாவின் போக்கு உள்ளது. ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபை கூட்டத்தில் இந்தியாவின் பெயரை குறிப்பிடாமல் மறைமுகமாக சாடும் வகையில் கனடா தூதர் பேசி உள்ளார்.

நிஜார் கொலை மூலம் இந்தியா-கனடா இடையிலேயான உறவை சீர் குலைக்கும் வகையில் பாகிஸ்தான் செயற்பட்டு இருப்பதாக இந்திய ஊடுபா ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. (நி-5)

## தெலுங்கானாவில் 1.26 கோடிக்கு ஏலம் போன விநாயகர் லட்டு



(டில்லி)

தெலுங்கானாவில் 1.26 கோடிக்கு ஏலம்போன விநாயகர் லட்டு.தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் - பந்த லகுடா கீர்த்தி ரிச்மண்ட் வில்லாவில் விநாயகர் சதுர்த்தி அன்று விநாயகர் சிலை வைத்து வழிபடுவது வழக்கம். இந்த விநாயகருடன் லட்டு பிரசாதம் வைத்து சிறப்பு பூஜைகள் மேற்கொள்ளப்படும்.

விநாயகர் சிலையைக் கரைப்பதற்கு முன்பு லட்டு ஏலம் விடப்படும். இந்த ஏலத்தின் மூலம் கிடைக்கும் பணத்தில் சொசைட்டி மூலமாக பல தொண்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அப்படி இந்த ஆண்டும் லட்டு ஏலம் நடைபெற்றது. இதில், ஒரு லட்டு 1.26 கோடிக்கு ஏலம் போனது. வில்லாவில் உள்ள ஒட்டு மொத்த சமூகமும் சேர்ந்து ஒன்றுகூடி அந்த லட்டுவை சொந்தமாக்கிக் கொண்டனர். கடந்த ஆண்டு இதே வில்லாவில் நடந்த லட்டு ஏலத்தில் 60.80 லட்சத்திற்கு லட்டு ஏலம் எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## உலக புதுமை குறியீடு தரவரிசையில் 40 ஆவது இடத்தில் இந்தியா

(டில்லி)

உலக அறிவுசார் சொத்து அமைப்பு உலக அளவில் புதுமை குறியீட்டு எண் தர வரிசையை வெளியிட்டு வருகிறது.132 நாடுகள் கொண்ட பட்டிய லில்,இந்தியா தனது 40 ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண் டுள்ளது.

ஜெனிவாவில் உள்ள உலக அறிவுசார் சொத்து அமைப்பு. ஆண்டுதோறும் உலக அளவில் புதுமை குறியீட்டு எண் தர வரிசையை வெளியிட்டு வருகிறது.இந்த ஆண்டுக்கான தர வரிசை பட்டியல் நேற்று முன் தினம் வெளியிடப்பட்டது. அதில், 132 நாடுகள் கொண்ட பட்டியலில், இந்தியா தனது 40 ஆவது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டும் 40 ஆவது இடத்தில்தான் இருந்தது. கடந்த 2015 ஆம் ஆண்டு 81 ஆவது இட த்தில் இருந்த இந்தியா . தொடர்ந்து முன்னேறி, 40 ஆவது இடத்தை அடைந்திருப்பதாக "நிதி ஆயோ க்" தெரிவித்துள்ளது. அறிவுசார் மூலதனம், துடிப்பான ஸ்டார்ட்அப் திட்டம்,பொது, தனியார் ஆராய்ச்சி அமைப்புகளின் பணிகள் ஆகியவற்றால் இடம்தக்க வைக்கப்பட்டதாக கூறியுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவில் அணு ஆயுதங்களை தயாரிக்க வடகொரியா திட்டம்

## அதிர்ச்சியில் அமெரிக்கா

(பியாங்யாங்)

**அணு ஆயுதங்களை அதிகபடியான எண்ணிக்கையில் தயாரிப்பதற்காக அணுஆயுதக்கொள்கையில் வடகொரியா திருத்தம் செய்திருப்பது அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.**



வடகொரிய பாராளுமன்றத்திற்கான உச்ச மக்கள் சபையில் 14 ஆவது கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அணு ஆயுத கொள்கையில் திருத்தம் செய்வதற்கான மசோதா முன்வைக்கப்பட்டு அதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒப்புதல் அளித்தனர்.

அமெரிக்காவிற்கு பகிரங்க எச்சரிக்கை விடுக்கும் விதமாக அணு கொள்கைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக தனது படைகள் மூலம் போர் ஒத்திகைகளை நடத்தி தங்களுக்கு அமெரிக்கா ஆத்திரமூட்டுவது எல்லையை மீறிபோவதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போதைய அணுக் கொள்கை திருத்தம் மூலம் அதிகபடியாக அணு ஆயுதங்களை அந்தநாடு உற்பத்தி செய்யும். கடந்த 2003 ஆம் ஆண்டு அணு ஆயுதபரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறிய வடகொரியா 2006 ஆம் ஆண்டு முதல் இது வரை 5 இற்கும் மேற்பட்ட முறை அணுஆயுத சோதனை நடத்தியுள்ளது.

இதற்கிடையே தென் கொரியாவிற்கு ஆதரவாக 40 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவின் அணுஆயுத நீர்மூழ்கிக் கப்பல் வடகொரியா அருகே நிறுத்தப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த வடகொரியா தற்போது அணு ஆயுத கொள்கையில் திருத்தம் செய்திருப்பது, அமெரிக்கா வடகொரியா இடையே பதற்றத்தை அதிகரித்துள்ளது. (நி-5)

## பகிரங்கமாக மன்னிப்பு கோரிய கனடா பிரதமர் ட்ரூடோ

(ஒட்டாவா)

2 ஆம் உலகப்போரின் போது ஹிட்லரின் நாஜிப் படையில் முக்கிய பொறுப்பு வகித்த ஒருவரை பாராளுமன்றில் வைத்து கௌரவித்து யூத மக்களின் நினைவுகளை மீறியது தொடர்பில் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மன்னிப்பு கோரியுள்ளார்.

உக்ரைன் ஜனதிபதி ஜெலன்ஸ்கியுடன் கடந்த 22 வந்திருந்த 98 வயதான போர் வீரர் யாரோஸ்லாவ் ஹுன்கா கனடா பாராளுமன்றத்தில் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் 2 ஆம் உலகப்போரின்போது ஹிட்லரின் நாஜிப் படையில் முக்கிய பொறுப்பு வகித்தவர் என்றும் லட்சக்கணக்கான யூத மக்கள் உயிரிழக்க காரணமானவர் எனவும் தகவல் பரவியது.

அதனை தொடர்ந்து அவரை கௌரவித்தமை தொடர்பில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மன்னிப்பு கோரியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, இந்த விவகாரம் கனடா பாராளுமன்றத்தை முழுவதுமாக தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது. இந்த நிகழ்வுக்கு வருந்துகிறேன்.

அப்போதைய சூழலை அறியாமல் யூத மக்களின் நினைவுகளை மீறியதற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்" என்றார். (நி-5)

## பங்களாதேஷில் டெங்கு நோயால் சுமார் 1000 பேர் உயிரிழப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் சமீபத்திய வாரங்களில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், டெங்கு நோய்ப் பரவலை கட்டுப்படுத்த அதிகாரிகள் போராடி வருகின்றனர்.

அதேவேளை, பங்களாதேஷில் வைத்தியசாலைகளிலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு மாதங்களில் டெங்கு நோய் தாக்கத்தினால் அன்றாடம் 20 உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த 22 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (நி-5)

## உலகின் மிகச் சிறந்த துறைமுகமாக சிங்கப்பூர் துறைமுகம் தெரிவு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர்த் துறைமுகம் இவ்வாண்டின் அஃப்லாஸ் எனும் ஆசிய சரக்கு, தளவாட, விநியோகத் துறை விருது நிகழ்ச்சியில் இரண்டு விருதுகளை வென்றுள்ளது.

சிங்கப்பூர்த் துறைமுகம் 35 ஆவது முறையாக ஆசியாவின் மிகச்சிறந்த துறைமுகமாகவும் 3ஆவது முறையாக உலகின் மிகச சிறந்த துறைமுகமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர்க் கடல்துறை, துறைமுக ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கை அதனைத் தெரிவித்தது.



"சிங்கப்பூர் 2 விருதுகள் வென்றதில் பெருமிதம் கொள்கிறோம். இவ் விரண்டு விருதுகளும் கூட்டு முயற்சியின் பலன்" என்று தற்காலிகப் போக்குவரத்து அமைச்சர் சீ ஹொங் டாட் தெரிவித்தார். (நி-5)

## தாய்வானில் தயாரிக்கப்படும் நீர்மூழ்கி போர்க்கப்பல்



(தாய்பெய்)

தாய்வானில் முதன் முறையாக நர்வால் என்ற நீர்மூழ்கி போர்க்கப்பல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

தாய்வான் வரலாற்றில் இது முக்கியமான நாள் என்றும் இதில் 3 ஆயிரம் டொன் எடை வரையிலான பொருட்களை சுமந்து செல்லலாம் என்றும் ஜனாதிபதி சாய்-இங்-வென் தெரிவித்தார்.

மேலும் ஒருசில சோதனைகளுக்கு பின்னர் இந்த கப்பல் அடுத்த ஆண்டு நாட்டின் கடற்படையில் சேர்க்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனையை அரசாங்கம் செயற்படுத்தவில்லை

## உதய கம்மன்பில சாடல்

(கொழும்பு)

"அரச கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்" என்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையை அரசாங்கம் செயற்படுத்தவில்லை என உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார்.

மஹரகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதார பாதிப்புக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழு உலகத்தையும் வலம் வருகிறார். ஆனால் இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தவுடன் எரிபொருள், எரிவாயு என்பன வழமைக்கு திரும்பியுள்ளது என ஆளும் தரப்பினர் அவரை புகழ்பாடுவது நாட்டு மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு.

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளிநாட்டு கடன்கள் செலுத்திய நிலையில் எரிபொருள்,எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 2022 ஏப்ரல் மாதமளவில் வெளிநாட்டு கடன்களை செலுத்த முடியாது, இலங்கை வங்குரோத்து நிலை அடைந்து விட்டது என அரசாங்கம் அறிவித்தது.

கடந்த ஒன்றரை வருட காலமாக வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்தாமல் அந்த நிதியைக் கொண்டே எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வெளிநாட்டு கடன்களை தொடர்ந்து செலுத்தாமல் இருக்க முடியாது.

கடன் பெறுவதையே பிரதான பொருளாதார கொள்கையாக அரசாங்கம் கருதுகிறது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் தற்போது தோல்வியடைந்துள்ளது.

கடன் மறுசீரமைப்பில் முன்னேற்றம் இல்லாத காரணத்தால் இரண்டாம் தவணை கடன் வழங்கல் தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை நிறைவேற்றியுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுவது அடிப்படையற்றது. அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கிய சகல தகவல்களையும் பகிரங்கப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை அரசாங்கம் செயற்படுத்தவில்லை.

இந்த நிபந்தனை நிறைவேற்றப்பட்டால் அரச நிர்வாகத்தில் நிலவும் ஊழலை பகுதியளவேனும் குறைத்துக் கொள்ளலாம்" எனத் தெரிவித்துள்ளார். (நி-5)

# குடைசாய்ந்து விபத்திற்குள்ளான மகிழூர்ந்து-கொட்டகலையில் சம்பவம்

(ஹற்றன்)

பலத்த மழையில் காரை வேகமாக செலுத்தியதில், கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வழுக்கிச் சென்று வீதியருகில் இருந்த மண்மேட்டில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில், கொட்டகலையில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலேயே குறித்த கார் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது கார் சாரதி சிறு காயங்களோடு உயிர் தப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 500 |
| தக்காளி | 200 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 160 |
| கோவா | 200 | 140 | 200 |
| கரட் | 300 | 230 | 350 |
| பூசணி | 70 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 250 | 150 | 200 |
| லீக்ஸ் | 180 | 150 | 200 |
| பீற்றூட் | 120 | 140 | 200 |
| கறிமிளகாய் | 250 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 120 |
| போஞ்சி | 400 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 450 | 500 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 150 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2926

### சந்தியா




### வசந்




### உலகநாதன்




### அஜந்தன்




### கோபிகா




### ஜீவா

"டொக் டொக்"
அம்மா... யாரோ வாசல்ல!
அது டேபிள் மேட்ரா...
டேபிள் மேட்டா? அப்பாம்மா...
அது உங்கப்பாதான்...
ஏன் லேட்டு என்று கேட்டா
பதினெட்டு விதமான கதை சொல்லுவாரு...
அதுதான் அவருக்கு டேபிள்மேட் என்று
பேர் வைச்சிருக்கன்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கல்லூரித் தினவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவுறுவதைக் குறிக்கும் வகையில் கல்லூரித் தினவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் சாந்தினி வாகீசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் கலாசாலையின் ஓய்வுநிலை பிரதிமுதல்வர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு எழுதிய வடக்கின் ஆசிரிய கலாசாலைகள் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை பற்றிய சிறப்பாய்வு என்ற நூல் வெளியிட்டுவைக்கப்படவுள்ளதுடன் விரிவுரையாளர் தர்சினி முத்துராஜாவை பிரதம ஆசிரியராகக் கொண்ட கலாதீபம் மாத இதழின் கல்லூரித் தின சிறப்புப் பிரதியும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நூற்றாண்டைக் குறிக்கும் முகமாக 100 நிறைகுடங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களுடனான ஊர்வலம் என்பன இடம்பெறவுள்ளதாகவும் கலாசாலையின் பழைய மாணவர்களை நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும் நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (5-6)

# உலக சுற்றுலா தினத்தையொட்டி யாழில் இடம்பெற்ற சுற்றுலாக் கண்காட்சி

(அராலி)

வடமாகாண சுற்றுலாப் பணியகம், தொழிற்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக சுற்றுலா தினத்தினை முன்னிட்டு மாறி வரும் சுற்றுலா வளர்ச்சியில் வடமாகாண உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சந்தைப் படுத்தும் சுற்றுலாக் கண்காட்சி நேற்று யாழ். மத்திய கலாசார மையத்தில் வட மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் தலைமையில் நடைபெற்றது.



இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபால சுந்தரன் கலந்துகொண்டு கண்காட்சி கூடங்களை அங்குரார்ப் பணம் செய்து வைத்தார்.

இவ் கண்காட்சியில் 43 உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்தி செய்துள்ள பொருட்களின் கூடாரங்கள் செய்யப்பட்டுள்ளது.இதில் 18 உணவு சார்ந்த பொருட்களும், 25 கைவினை சார்ந்த உற்பத்தி பொருட்களும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் வடமாகாண தொழிற்றுறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.வனஜா செல்வரட்ணம் மற்றும் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (5-6-104)

# மாதா சொரூபம் அடித்து நொருக்கப்பட்டது

(அராலி)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தனிப்பனை வடக்கில் குடும்பஸ்தர் ஒருவரின் காணிக்குள் இருந்த மாதா சொரூபம் மூன்றாவது தடவையாகவும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

நபர் ஒருவர் மதுபோதையில் அட்டகாசம் செய்வதாக மருதங்கேணி பொலிஸாரிடம் அங்கு வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில் இதனை அறிந்த மதுபோதையில் இருந்த குறித்த நபர் நேற்று முன் தினம் இரவு காணிக்குள் அத்து மீறி நுழைந்து அங்கே நிறுவப்பட்டிருந்த மாதா சொரூபத்தை அடித்து நொறுக்கியுள்ளார் மேலும் அந் நபர் குறித்த மாதா சொரூபத்தை மூன்றாவது தடவையாகவும் அடித்து நொறுக்கியுள்ளார் என்று பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர். (5-6-104)

# யாழில் கருஜெயசூரிய



(அராலி)

சூரிய நிறுவகத்தின் அனுசரணையில் இரண்டாவது மொழிக் கற்கையை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வானது நேற்று யாழ்ப்பாணம்-சுதுமலையில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

ஹெல்தி லங்கா நிறுவனத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் தே.பிரேமராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரம், முன்னாள் கல்வி இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஷ்வரன், வலி.தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் . உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர் மேலும் குறித்த நிகழ்வில் கற்கை நெறியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (5-6-104)

# சாவகச்சேரியில் பெரும்போக நெல் விநியோகம் இன்று

(சாவகச்சேரி)

புத்தூர்ச்சந்தியில் அமைந்துள்ள சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை விதை நெல் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்போக நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது தொடர்ச்சியாக நான்கு தினங்கள் அரச விடுமுறை என்பதனால் விவசாயிகள் விதை நெல்லை பெற முடியாத சூழ்நிலை காணப்படுவதால் இன்று விதை நெல் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பி.ஜி 406 மற்றும் ஏ.ரி 362இன நெல் வர்க்கங்களை விதை நெல்லாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6-30)


## பரிசளிப்புவிழாவும் சிறுவர் தின நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் நடத்தப்படும் அமரர். அன்னலிங்கம் ஞாபகார்த்த பரிசளிப்பு விழாவும் சிறுவர் தின நிகழ்வும் நாளை 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் , மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் திருமதி காஞ்சனமாலா உதய குமாரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக உடுவில் கலாச்சார உத்தியோகத்தர் திருமதி. பத்மராணி சிவஞானராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5-6)

# சங்கத்தானையில் வான்படை தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி



(சாவகச்சேரி)

செப்டெம்பர் 28 படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி-சங்கத்தானையில் அமைந்துள்ள படுகொலை நினைவு முற்றத்தில் உணர்வுபூர்வமாக இடம பெற்றது.

28.09.1993 அன்று பிற்பகல் 5.03 மணிக்கு சாவகச்சேரி-சங்கத்தானை சாரதா வீதியில் உள்ள மரக்காலை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழி மீது இலங்கை விமானப்படையின் இரண்டு புக்காரா விமானங்கள் நடத்திய தாக்குதலில் பதுங்கு குழிக்குள் இருந்த 20அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூரும் முகமாக உறவுகளின் ஏற்பாட்டில் 30 ஆவது நினைவு தினம் சாரதா சனசமூக நிலையத்தில் இருந்து தீப ஊர்வலத்துடன் வருகை தந்து படுகொலை நினைவு முற்றத்தில் அமைந்துள்ள நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (5-6-30)

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச நிலையமும் தேசியகல்வி நிறுவகமும் இணைந்து நடத்தும் ஆசிரிய மாணவர்களின் கல்வி டிப்ளோமா பாடநெறி தொடர்பான கல்விக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் பாடநெறி இணைப்பாளர் தலைவர் ந. தயாளன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பாடநெறி இணைப்பாளர் த. வில்வநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)



யாழ். நீர்வேலி அரசகேசரி சித்திவிநாயகர் ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

(படம் -கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

296





"பொன்னியின் செல்வர் கூடவா?"

"அவரைப் பற்றி என்னை எதற்காகக் கேட்கிறாய்?"

"இளவரசரைப் பற்றி விசாரித்துச் சொல்வதாகக் கூறினாயே?"

"அவர் இருக்கக்கூடிய இடத்தை விசாரித்துச் சொல்வதாகச் கூறினேன். அவர் மனிதரா, அசுரரா, தேவரா என்று கண்டுபிடித்துச் கூறுவதாகச் சொல்லவில்லையே?"

படகு தீவுகளை நெருங்கிக் கொண்டிருந்தது. கடல் நடுவே கேட்கும் ஓங்காரத் தொனிக்குப் பதிலாகக் கடல் அலைகள் கரையிலே மோதும் போது உண்டாகும் சலசலப்புச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

"என்ன சொல்கிறாய்? எதிரே தெரிகிறதே, அதுதான் பூதத் தீவு, வலப்புறத்தில் உள்ளது நாகத்தீவு. எங்கே போகட்டும் நாகத் தீவிலேயே உன்னைக் கொண்டுபோய் இறக்கி விட்டு விடட்டுமா? விசாரித்துக்கொண்டு போகிறாயா?"

"இல்லை பூதத் தீவுக்கே போகலாம். கொஞ்ச நேரம் தாமதமானாலும் இளவரசர் எங்கே இருக்கிறார் என்று தெரிந்து கொண்டு போவது தான் நல்லது."

"அப்படியானால் சரி நீ எனக்குக் கொடுத்த வாக்கு றுதி ஞாபகம் இருக்கட்டும்!"

சிறிய தீவின் கரையில் வந்து படகு நின்றது. படகைப் பார்த்துக்கொள்ளும்படி வந்தியத்தேவனிடம் சொல்லிவிட்டுப் பூங்குழலி அந்த மரகதத் தீவிற்குள்ளே சென்றாள். வந்தியத்தேவன் அவள் சென்ற திக்கைப் பார்த்தான். பச்சை மரங்களுக்கிடையில் அவள் விரைவில் மறைந்து விட்டாள்.

போதத் தீவு, மக்களின் வாக்கில் மருவிப் பூதத்தீவாக மாறியது பற்றி வந்தியத்தேவன் முதலில் சிந்தித்தான். பிறகு அத்தீவுக்குள்ளே இப்போது குடியிருக்கும் பூதம் எப்படிப்பட்ட பூதமாயிருக்கும் என்று எண்ண மிட்டான். பின்னர் இந்த அதிசயமான பெண்ணின் உள்ளத்தில் மறைந்திருக்கும் மர்மம் என்னவாயிருக்கும் என்று வியந்தான்.

பூங்குழலி கூறியபடி ஒரு நாழிகைக்குள் திரும்பி வந்தாள். படகில் ஏறிக் கொண்டு வந்தியத்தேவனையும் ஏறிக் கொள்ளச் சொன்னாள். நாகத் தீவை நோக்கிப் படகு சென்றது. "விசாரித்து விஷயத்தைத் தெரிந்துகொள்ள முடிந்ததா?" என்று வல்லவரையன் கேட்டான்.

"முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்காக மாதோட்டத்துக்கு வந்திருக்கிறாராம். நேற்றைக்கு இளவரசரும் மாதோட்டத்துக்கு வந்திருக்க வேண்டும். எத்தனை நாள் மாதோட்டத்தில் இருப்பார் என்று தெரியாது. நீ அங்கே போய்த் தெரிந்து கொள்ளலாம்" என்றாள் பூங்குழலி.

"மாதோட்டம் இங்கிருந்து எத்தனை தூரம் இருக்கும்?"

"ஐந்து, ஆறுகாத தூரம் இருக்கும். வழியெல்லாம் ஒரே காடு. கோடிக்கரைக் காடு மாதிரி இருக்கும் என்று நினைக்காதே. வானை எட்டும் மரங்கள் அடர்ந்த காடு. பட்டப்பகலில் சில இடங்களில் இருட்டாக இருக்கும். யானைக் கூட்டங்களும், வேறு துஷ்ட மிருகங்களும் உண்டு. நீ ஜாக்கிரதையாகப் போய்ச் சேர வேண்டும்."

"காட்டில் வழி காட்டுவதற்கு உன்னைப்போல் ஒரு கெட்டிக்காரப் பெண் மட்டுமிருந்தால்?" என்று வல்லவரையன் பெரு மூச்சு விட்டான்.

"அப்போது நீ ஒருவன் என்னத்திற்காக! ஓலையை என்னிடம் கொடுத்துவிடு! நானே கொண்டுபோய்க் கொடுக்கிறேன். இல்லை முடியாது! ஏதோ பைத்தியக்காரியைப் போலப் பேசுகிறேன். என்னால் முடியவே முடியாது. இளைய பிராட்டியிடம் ஒப்புக் கொண்டு வந்தாயல்லவா? அதை நீதான் செய்து முடிக்கவேண்டும்!" என்றாள். "ஆகட்டும் பூங்குழலி! நான் செய்து முடிப்பேன். இன்னொருவர் கெஞ்சிக் கேட்டாலும் கொடுக்க மாட்டேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கரடியின் கதறல்



ஒரு காட்டுல ஒரு கரடிக்குட்டி வாழ்ந்து வந்தது. ஒருநாள் உணவைத் தேடி அது காட்டில் அலைந்து கொண்டு இருந்தது. அந்த பரிதாபமான கரடி நல்ல உணவை சாப்பிட்டு பல நாட்கள் ஆகி விட்டன. அதற்கு பிடித்த காய் கனிகள், கொடிகள், வேர்கள் இதையெல்லாம் நினைத்தாலே நாக்கில் நீர் ஊறிற்று.

அது ஒரு அடர்த்தியான காடு. பல உயிரினங்கள் பரவி இருந்தன. தனது பசியை போக்கும் உணவு எப்போது கிடைக்கும் என எண்ணிய வாறு திரிந்துக் கொண்டிருந்தது, கரடிக் குட்டி.

சற்றுத் தொலைவில் மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்த ஏதோ ஒன்று அதன் கண்ணில் பட்டது.

அதை நோக்கி கரடிக்குட்டி சென்று கொண்டிருந்தது. அருகில் நெருங்கியது அது தேன் கூடுதான். பெரும் மகிழ்ச்சியில் கர[illegible] றுப்பார்த்தது. அ[illegible] தேனீக்கள் எதுவும் இல்லை. நம்ப முடியாமல் கரடி தன் கண்களை தேய்த்து கொண்டு பார்த்தது. தனது அதிர்ஷ்டத்தை கரடியால் நம்ப முடியவில்லை. துள்ளிக் குதித்துக் கொண்டது.

உறுதிசெய்து கொண்ட பின் கூட்டில் இருந்து [illegible] உண்ட நிலையை கரடிக்குட்டி உணர்ந்தது. மேலும் இரண்டு மூன்று முறை பருகி தனது பசியை போக்கிக் கொண்டது. அங்கிருந்து கிளம்ப எண்ணியது.

திடீரென ஆசை பெருக்கெடுத்த நிலையில், கூட்டை எடுத்து சென்றால் தேன் முழுவதையும் சாப்பிட்டு விடலாம் என திட்டம் போட்டது. அதன் படி கூட்டை எடுக்க தனது காலை தூக்கியது.

அப்போது ரீங்காரமிட்டவாறு ஒரு பெரிய தேனீக் கூட்டம் தன்னை நோக்கி வருவதை கண்டு கரடி குட்டி திகைத்தது. அந்த கூட்டை சேர்ந்த தேனீக்கள் அவை. தேனீக்கள் நாள் முழுவதும் கடுமையாக உழைத்து சேகரித்து தேனை கூட்டில் வைப்பதற்காக சேகரித்து தேனை கூட்டில் வைப்பதற்காக வந்து கொண்டிருந்தன.

கூட்டை நெருங்கிய போது கரடி கூட்டை பிரிப்பதை பார்த்தன. அவை சேகரித்த விலைமதிப்பற்ற தேனை கரடிக்குட்டி அபகரிக்க வருவதைக்கண்டு கோபமான தேனீக்கள் கரடியை சூழ்ந்து கொண்டு கொட்ட ஆரம்பித்தன. தேனீக்கள் கொட்டியதால் கரடிக்கு மிகவும் வலித்தது. வலி தாங்காத கரடிக்கு மிகவும் ஆத்திரம் ஏற்பட்டது.

"எனக்கு இல்லாத இந்த கூடு தேனீக்களுக்கு இருக்க கூடாது" என மனதில் சொல்லிக்கொண்டு, வேகமாக கூட்டை பிடிக்க குதித்தது. பிடித்து கூட்டை அழிக்க வேண்டும் என்ற வெறி அதற்கு ஏற்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
~ ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரு நீதிபதிக்கே இக்கதி என்றால்...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவண ராஜா அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய சம்பவம் நாடு முழுமையிலும் பேசுபடுபொருளாகியுள்ளது.

ஆம், குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் காரணமாக நீதிபதி சரவண ராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

குருந்தூர்மலையில் விகாரை அமைப்பதற்கு இடைக்காலத் தடைவிதித்தமை மற்றும் குருந்தூர்மலை ஆதிசிவனை வழிபடுவதற்கும் பொங்கல் செய்வதற்கும் வழங்கிய அனுமதி என்பவற்றை அடுத்து நீதிபதி சரவண ராஜாவுக்கு கடும் அழுத்தம் உயிர் அச்சுறுத்தல் என்பன விடுக்கப்பட்டமையால் அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்பட்டிருந்தார்.

தனது நீதிபதிப் பதவியைத் துறப்பதற்கான விளக்கத்தில்; குருந்தூர்மலை தொடர்பில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர், தனக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் மற்றும் வழங்கப்பட்ட தீர்ப்பை மாற்றுமாறு விடுக்கப்பட்ட அழுத்தம் என்பன பற்றி அவர் பிரஸ்தாபித்துள்ளார்.

ஏலவே குருந்தூர்மலை தீர்ப்புத் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் வைத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவை கடுமையாக விமர்சித்திருந்தமை தெரிந்ததே.

ஆக, நீதிபதியின் தீர்ப்பை ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் விமர்சிக்கின்ற அளவில் நிலைமை உள்ளதெனில், நீதிமன்றத் தீர்ப்பு என்பது எவ்வாறாக இருக்க வேண்டுமென சிங்களப் பேரினவாதிகளும் சிங்கள ஆட்சித் தரப்பும் எதிர்பார்க்கிறதென்பது தெளிவாகிறது.

அதேநேரம் இந்த நாட்டில் தமிழ் நீதிபதிகளுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்பு எவ்வாறாக உள்ளதென்பதையும் இப்போது உலக நாடுகள் உணர்ந்திருக்கும்.

ஆம், நீண்டநெடுங்காலமாக சைவ மக்கள் வழிபட்டு வந்த குருந்தூர்மலை ஆதிசிவனை வழிபடுவதற்கும் வழமைபோல் பொங்கல் செய்வதற்கும் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மையப்படுத்தி அந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கின்ற நிலைமை இந்த நாட்டில் உள்ளதெனில், தீர்ப்பு வழங்கிய நீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடுகின்ற அளவுக்கு சிங்களப் பேரினவாதம் கோலோச்சுகிறதெனில், இலங்கையில் உள்நாட்டு விசாரணைகள் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தருமா? என்பதை உலக நாடுகள் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் ஒரு தமிழ் நீதிபதியின் வெளியேற்றம் இந்த நாட்டின் பேரினவாதிகளுக்கு நிச்சயம் பாடம் புகட்டியே தீரும்.

# முல்லை நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறியதற்கு அரசே பொறுப்பு

## தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா

(யாழ்ப்பாணம்)

குருந்தூர்மலை ஆலய விவகாரம் தொடர்பான வழக்கினை கையாண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி, தனது பதவியை ராஜினாமா செய்து நாட்டைவிட்டு வெளியேறியதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது என்பதை தயக்கம் எதுவும் இன்றி கூறிவைக்க விரும்புவதாக தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் தமிழ் தேசிய கட்சியின் தலைவர் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில், பாராளுமன்றத்துக்கு உள்ளே எழுப்பப்பட்ட இன வெறிக் கூச்சல்களுக்கு அப்பால், அதிகாரத் தரப்பினால், நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதிபதி மீது பிரயோகிக்கப்பட்ட உளவியல் ரீதியான அழுத்தங்களே, அவரை இந்த முடிவுக்கு தள்ளியிருக்கின்றன என்பது தெட்டத் தெளிவானது.

பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அனுசரணையாக, நீதிபதி சரவணராஜா வளைந்து கொடுக்க மறுத்திருந்த காரணத்தினால் தான், அவருக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கின்றது.

தமது கடமையை நேர்மையுடன் செய்ய விரும்பும் சகல நீதிபதிகளுக்கும் இது ஓர் சிவப்பு எச்சரிக்கை என்பதை, தமிழ், முஸ்லீம் மக்கள் மட்டுமல்லாமல், சிங்கள மக்களும் புரிந்து கொள்ள வேண்டிய நிலைமைக்குள் முழு நாடும் இப்போது தள்ளப்பட்டிருக்கின்றது. நீண்ட பல வருடங்களாக நிலவி வரும் அரச பயங்கரவாதம் என்பது, இப்பொழுது புதிய களம் ஒன்றை திறந்திருக்கின்ற நிலைமையில், சட்டத்தின் ஆட்சி தொடர்பில் எஞ்சியிருந்த நம்பிக்கைகளும் சிதறத் தொடங்கியுள்ளன.

எமது மக்களைப் பொறுத்தமட்டில், குருந்தூர் மலை விவகாரத்தில் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் நேர்மையான நீதிபதிக்கு ஆதரவாகவும், அதற்கும் மேலாக, நீதித்துறையின் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் பாரிய சவாலுக்கு எதிராகவும், எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை நாம் வெளிப்படுத்தியே ஆக வேண்டும். உலக அரங்கின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் அது நிச்சயமாக வெளிப்படுத்தப்படும் என்றுள்ளது. (ம-7)

# இலங்கையின் வெற்றி இந்தியாவுக்கே நன்றியுள்ளவர்களாக இருப்போம்

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி

(கொழும்பு)

இலங்கையின் வெற்றி இந்தியாவுக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருப்போம் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் இந்தியாவின் உதவி குறித்து சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், கடந்த ஆண்டை விட நாட்டின் நிலைமை மிகவும் சிறப்பாக உள்ளது. பணவீக்கம் குறைந்துள்ளது, ரூபாவின் பெறுமதி நிலையானதாக மாறியுள்ளது, கையிருப்பு உயர்ந்துள்ளது, சுற்றுலாதுறை வளர்ச்சியடைந்துள்ளது.

இந்தியா 3.9 பில்லியன் மதிப்பிலான பல்வேறு உதவிகளை எங்களுக்கு வழங்கியுள்ளது. நாடு என்ற ரீதியில் இந்தியாவுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இன்று நாம் அடைந்துள்ள நன்மதிப்பில் பெரும் பகுதி இந்தியாவுக்கு சாரும் என கூறியுள்ளார். (ம-7)

# படகு விபத்து ஒருவர் காயம்

## வல்லிபுரத்தில் சம்பவம்

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்த உற்சவத்தின் போது படகு சவாரியில் ஈடுபட்ட படகு ஒன்று கடும் காற்று காரணமாக தலைகீழாக புரண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை (29) இடம்பெற்றது. இதன் போது சக்கரத்தாழ்வார் தீர்த்தம் ஆடுவதற்கு முன்பாக பிற்பகல் ஒரு மணி தொடக்கம் படகுகள் கடலில் படகு சவாரிகளை மேற்கொண்டு இருந்தன.

இதன்போது பிற்பகல் 2.00 மணியளவில் கடும் காற்று காரணமாக படகு ஒன்று தலைகீழாக புரண்டு விபத்துக்குள்ளானது.

இதனைத் தொடர்ந்து கரையிலிருந்து படகுகள் சென்று அதில் இருந்தவர்களை மீட்டு வந்தனர்.

இதில் ஒருவருக்கு சிறு காயம் ஏற்பட்டதுடன் உயிர் ஆபத்துக்கள் ஏதும் நிகழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

# பல்லாயிரக்கணக்கான மக்கள் நயினாதீவுக்கு படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலுக்கு நேற்று பல்லாயிரக்காணக்கான மக்கள் படையெடுத்துள்ளனர்.

நாட்டில் இரு தினங்கள் விடுமுறை தினங்கள் என்பதாலும், அதனுடன் இணைந்து வார இறுதிநாட்கள் வருவதாலும் நீண்ட விடுமுறை காணப்படுகின்றது.

இந்தநிலையில், இந்த நீண்ட விடுமுறை நாட்களில் பெருமளவான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்துள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தின் நயினாதீவு விகாரைக்கும் நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்திற்கும் நேற்று மட்டும் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்துள்ளதாக தெரியவருகின்றது.

நயினாதீவு நோக்கி பயணிக்கும் மக்கள் குறிகட்டுவானில் பேருந்துகளை நிறுத்திவிட்டு படகு சேவைக்காக நீண்ட நேரம் காத்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட சில படகுகள் நேற்று படகு சேவையை மேற்கொண்டாலும் பயணிகளை ஏற்றி இறக்குவதில் பெரும் தாமதமான நிலை காணப்பட்டுள்ளது.

தமிழ் - சிங்கள மக்கள் நேற்றைய பௌர்ணமி நாளில் அம்மனுக்கும் நாகவிகாரைக்கும் வழிபாட்டுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# குளவி கொட்டியதில் எழுவர் படுகாயம்

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் மீது குளவி கொட்டியதில் 7 பேர் படுகாயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திம்புலபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

கிரேக்லி தோட்டத்தைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது தேயிலை மலைக்கு அடியிலிருந்த குளவிக்கூடு கலைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (ம-7)

# பொல்லால் அடித்து ஒருவர் படுகொலை

(கம்பஹா)

மினுவாங்கொடை அளுதேபொல பிரதேசத்தில் நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இருவருக்கிடையே இடம்பெற்ற குடும்பத்தகராற்றினை தீர்த்து வைக்க முற்பட்டபோதே குறித்த நபர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-இந்தியா உறவில் விரிசல் பின்னணி பற்றி ஒரு தொகுப்பு



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்விநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

04

1970 களில் மீண்டும் மதம் சார்ந்த பரபரப்பு எழுந்தது. இதற்கு ஆட்சியில் இருந்த கட்சியான இந்திய தேசிய காங்கிரஸில் சீக்கியர்கள் ஒதுக்கி வைக்கப்படவும் பாகுபாட்டுடன் நடத்தப்படவும் செய்கின்றனர் என்று காரணம் கூறப்பட்டது. மற்றும் அப்போதைய இந்திய பிரதமராக இருந்த இந்திரா காந்தியின் "சர்வாதிகாரத் தனமான" நடவடிக்கைகளும் இதற்கு காரணமாக இருந்தது.

இதுபோன்ற நடவடிக்கைகளின் எதிர்வினையாக, சீக்கிய தலைவர் சான்ட்ஜர்னாயில் சிங்பிந்திரன்வாலே என்பவரின் எழுச்சிக்கு வழிவகுத்தது. மேலும் அவர் நீதிக்காகவும் சீக்கிய நம்பிக்கைகளுக்காகவும் குரல் கொடுத்தார். மேலும் சீக்கிய பூர்வ இடமான காலிஸ்தான் என்பதை உருவாக்கவும் கோரினார். இதனால் பஞ்சாபில் திடீரென்று மதரீதியான வன்முறை தூண்டி விடப்பட்டது. சான்ட்ஜர்னாயில் சிங் பிந்திரன்வாலேயை எதிர்க்க 1984 ஆம் ஆண்டில் காந்தி எடுத்த ஆபரேஷன் புளூஸ்டார் நடவடிக்கையின் காரணமாக பொற்கோயில் புனிதம் கெடுக்கப்பட்டது.இதனால் இந்திரா காந்தி அவருடைய சீக்கிய பாதுகாவலர்களாலேயே படுகொலை செய்யப்பட்டார்.

1984 முதல், சீக்கியர் மற்றும் இந்துக்கள் இடையேயான உறவுகள் மீண்டும் மலர்ச்சியடைய தொடங்கின. இதற்கு வளரும் பொருளாதாரமும் ஒரு காரணமாக இருந்தது ஆனாலும் 2002 ஆம் ஆண்டில், வலதுசாரி இந்து அமைப்பான RSS -இன் கோரிக்கைகள், அதாவது "சீக்கியர்களும் இந்துக்களே" என்பது சீக்கிய உணர்வுகளைத் தூண்டி கோபமூட்டின. காலிஸ்தான் இயக்க நடவடிக்கைகளின் போது நிகழ்ந்த வன்முறை மற்றும் அரசியல், பொருளாதார தேவைகளுக்காக பல சீக்கியர்கள் இன்றும் போராடி வருகின்றனர்.

பிரிட்டிஷ் அரசு காலகட்டத்தில், ஓரளவுக்கு திறன் மிகுந்த சீக்கிய கலைஞர்கள் பஞ்சாபிலிருந்து கிழக்கு ஆபிரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு ரயில் பாதைகளை அமைக்கப் பயன்படுத்தப்பட்டனர். இரண்டாம் உலகப்போருக்கு பின்னர், சீக்கியர்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு இடங்களிலிருந்தும் இடம் பெயர்ந்து, அதிக அளவில் இங்கிலாந்திற்கு செல்ல தொடங்கினர். ஆனாலும் பலரும் வடஅமெரிக்காவிற்கு சென்றனர்.

ஒரு சில சீக்கியர்கள் கிழக்கு ஆபிரிக்காவில் இருந்து உகாண்டா சர்வாதிகாரி இடி அமீனால் 1972ஆம் ஆண்டில் வெளியேற்றப்பட்டனர். தொடர்ச்சியாக பொருளாதார காரணங்களுக்காக சீக்கிய நபர்களின் இடப்பெயர்வு, இப்போது கணிசமான பொருளாதார வளத்துடன் சீக்கிய மக்கள் இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, மலேசியா, கிழக்கு ஆபிரிக்கா,அவுஸ்திரேலியா மற்றும் தாய்லாந்து ஆகிய இடங்களில் காணப்படுகின்றனர்.

உலகளவில் 25.8 மில்லியன் சீக்கியர்கள் காணப்படுகின்றனர். இது மொத்த உலக மக்கள் தொகையில் 0.39% ஆகும். இந்தியாவில் 19 மில்லியன் சீக்கியர்கள் உள்ளனர். இது இந்திய மக்கள் தொகையில் கிட்டத் தட்ட 2% ஆகும். இதில் 75% ஆன சீக்கியர்கள் பஞ்சாப்பில் வாழ்கின்றனர்.

### காலிஸ்தான் இயக்கம் (Khalistan movement)

காலிஸ்தான் இயக்கம் (Khalistan movement) என்பது சீக்கியமதம் சார்ந்த தேசியத்தை வலியுறுத்தும் ஓர் அரசியல் இயக்கமாகும். சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு காலிஸ்தான் என்ற பெயரில் இந்தியாவின் பஞ்சாப் மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் என சீக்கியர்கள் அதிகம் வசிக்கும் மாகாணங்களை இணைத்து தனி நாடு வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஜர்னையில் சிங்பிந்தரன் வாலாவால் அமைக்கப்பட்டது காலிஸ்தான் இயக்கம்.

பஞ்சாப் மாகாணம் சீக்கியர்களின் பாரம்பரிய நிலப்பகுதியாகும். இந்திய நிலப்பகுதிகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் வருவருதற்கு முன் சுமார் 50 ஆண்டுகள் இப்பகுதிகளை சீக்கிய பரம்பரையினர் ஆண்டனர். இந்திய பாகிஸ்தானிய பிரிவினைக்குப் பின் பெருமளவில் சீக்கியர்கள் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலிருந்து இந்தியாவின் பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசத்திற்கு குடியேறினர். பின்னர் மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையின் அடிப்படையில் அதிக சீக்கியர்கள் வகித்த இந்தியாவின் பஞ்சாப் மாகாணம் மொழியின் அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என அகாலிதளம் கட்சி தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது.

இந்திய அரசு முதலில் இதை நிராகரித்தாலும் பின்னர் நடந்த தொடர் கோரிக்கைகளாலும் வன்முறைச் சம்பவங்களாலும் இந்திய ஒன்றிய அரசு இதற்கு உடன்பட்டது. ஆனால் தங்களுக்கு அதிக அதிகாரம் ஒன்றிய அரசால் தரப்படவில்லை என்ற காரணத்தால் காலிஸ்தான் தேசிய இயக்கம் தொடர்ந்து இயங்கிவந்தது. காலிஸ்தான் அமைப்பால், காலிஸ்தான் தனி நாடு என அறிவிக்கப்பட்டு அதற்கெனத் தனி நாணயத்தையும் அஞ்சல் தலையையும் வெளியிட்டது. இந்திராகாந்தி தலைமையிலான ஒன்றிய அரசு காலிஸ்தான் தேசியவாதிகளை புளூஸ்டார் நடவடிக்கையால் (Operation Blue Star) கட்டுப்படுத்தப்பட்டது. தற்போது பஞ்சாபில் இக் கோரிக்கை பரவலாகக் கைவிடப்பட்டுவிட்டது.

### புளூஸ்டார் நடவடிக்கை

புளூஸ்டார் நடவடிக்கை (Operation Blue Star) என்பது யூன் 3-6, 1984 இல் நடைபெற்ற இந்திய இராணுவத்தின் நடவடிக்கை ஆகும். அம்ரித்சர் நகரின் பொற்கோயிலில் தஞ்சம் புகுந்த சீக்கிய பிரிவினைவாதிகளை பிடிக்கும் பொருட்டு, அப்போதைய இந்தியப் பிரதமரான இந்திரா காந்தியின் ஆணைப்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. காலிஸ்தான் இயக்கத்தின் தலைவர் ஜர்னையில் சிங் பிந்தரன் வாலாவால் தலைமை தாங்கப்பட்ட பிரிவினை வாதிகள் பெருமளவில் ஆயுதங்களை சீக்கியக் கோவிலில் சேர்த்ததாக குற்றம் சாட்டப்பட்டனர்.

இந்த நடவடிக்கை இந்திய இராணுவத்தினால் டாங்கிகள் மற்றும் கவசவாகனங்களோடு நடத்தப்பட்டது. இராணுவ நடவடிக்கை வெற்றி பெற்றாலும், இத்தகைய நடவடிக்கை பெருத்த விவாதத்துக்குள்ளானது. குற்றம் சாட்டப்பட்டது. தாக்குதலின் காலம் மற்றும் முறைக்கு அரசு அளித்த நியாயப்படுத்தும் விவரணைகள் பெருமளவில் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. இந்தியாடுடே பத்திரிகையால் "புளூஸ்டார் நடவடிக்கை" முதல் 10 அவமானகரமான அரசியல் நடவடிக்கைகளில் ஒன்றாக கூறப்பட்டது.

அரசுத் தரப்பில், சாவு எண்ணிக்கை ராணுவத்தில் 83 ஆகவும் பொது மக்கள் தரப்பில் 492 ஆகவும் கூறப்படினும் சில தன்னிச்சையான மதிப்பீடுகள் சாவு எண்ணிக்கையை 1500 வரை இருக்குமென கூறுகின்றன.

இந்த இராணுவ நடவடிக்கை உலகம் முழுவதிலுமுள்ள சீக்கியர்களிடையே பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணியது. மேலும் இந்தியாவிலும் பதற்ற நிலையால் சீக்கியர் மேல் பல இடங்களில் தாக்குதலும் நடை பெற்றது. இராணுவத்தில் இருந்த சீக்கியர் ஆட்சிக் கெதிராக கிளர்ச்சி செய்தனர். இந்திய அரசு குடியாண்மை பணிகளிலும் இராணுவத்திலும் இருந்த பல சீக்கியர் பணிகளைத் துறந்தனர். மேலும் சில சீக்கியர்கள் இந்திய அரசால் அளிக்கப்பட்ட விருதுகளையும் பாராட்டுப் பத்திரங்களையும் அரசிடம் திரும்பக் கொடுத்தனர்.

இராணுவ நடவடிக்கை நடைபெற்ற நான்கு மாதங்களுக்கு பிறகு, அதாவது 31 ஒக்டோபர் 1984 அன்று, இந்திராகாந்தி இரண்டு சீக்கிய மெய்க்காப்பாளர்களால் படுகொலை செய்யப்பட்டார். இது ஒரு பழிவாங்கிய நிகழ்வாகவே இன்றும் பார்க்கப்படுகிறது. தான் கொல்லப்படுவதற்கு முதல் நாளிரவு ஒரு அரசியல் கூட்டத்தில், "இந்தியாவுக்காக என் உயிர்போனால் நான் வருத்தப்பட மாட்டேன். என் ஒவ்வொரு துளிரத்தமும் இந்தியாவை பலம் மிக்க நாடாக்கும்" என்று இந்திரா காந்தி பேசினார்.

இந்திராகாந்தியின் படுகொலையைத் தொடர்ந்து 5000இற்கும் மேற்பட்ட சீக்கியர்கள் சீக்கிய-எதிர்ப்புக் கலகங்களில் கொல்லப்பட்டனர். சீக்கிய இனத்தவரிடையே இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக பார்க்கப்படுகிறது. சீக்கியரால் "பெரும்படுகொலை"எனக் கருதப் படும் 1761 இல் ஆப்கானிய அகம துஷா அப்தாலி-யின் சீக்கிய இனப் படுகொலையோடு இந் நிகழ்வு ஒப்பு நோக்கப்படுகிறது.

பொற்கோவில் தாக்குதலில் பிரித்தானியாவின் பங்கு பிரித்தானியாவின் அரச ஆவணங்கள் 30 வருடங்களின் பின்னர் பொதுவில் விடும் (வெளிப்படுத்தும்) வழக்கம் உள்ளது. அதன்படிசில ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட ஆவணங்களின் படி பொற்கோயில்மீதான தாக்குதலுக்கு பிரித்தானிய அரசிடம் இந்தியா உதவி கேட்டதாகவும் அதற்கு மார்கரெட் தாட்சர் தலைமையிலான அரசு இராணுவத் திட்டத்தை அமைக்க சிறப்பு வான் சேவை பிரிவைச் சேர்ந்த ஒரு இராணுவ அதிகாரியை அனுப்பி திட்டம் தீட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் தகவல்கள் கசிந்ததைத் தொடர்ந்து பிரித்தானியா பொற் கோவில் மீதான தாக்குதல் நடவடிக்கைக்கு ஆலோசனை வழங்கியதை ஒத்துக் கொண்டது. ஆயினும் தங்கள் அறிவுரையில் இருந்து தாக்குதல் நடவடிக்கை மாறுபட்டிருந்ததாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

### கனடாவில் சீக்கிய மதம்

கனேடிய சீக்கியர்கள் கனடாவின் மிகப் பெரிய கிறிஸ்தவர் அல்லாத மதக் குழுக்களில் ஒன்றாகும். மற்றும் நாட்டின் மிகப் பெரிய தெற்காசிய இனக் குழுவை உருவாக்குகின்றனர். இன்று கனடாவின் சீக்கிய மக்களில் பாதிபேர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வாழ்கின்றனர். முதல் சீக்கியர்கள் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கனடாவிற்கு வந்தனர். விக்டோரியா மகாராணியின் வைர விழா (1897) மற்றும் எட்வர்ட் VII இன் முடிசூட்டு விழா (1902) ஆகிய வற்றுக்குச் செல்லும் வழியில் ஹாங் காங் இராணுவக் குழுவின் ஒரு பகுதியாக சிலர் கனடாவுக்குச் சென்றனர்.

முதல் குடியேறியவர்கள் 1904 இல் வந்து பிரிட்டிஷ் கொலம்பியாவில் தங்களை நிலை நிறுத்திக் கொண்டனர். 5,000 இற்கும் மேற்பட்ட தெற்காசியர்கள், அவர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமான சீக்கியர்கள் 1908 இல் அவர்களின் குடியேற்றம் தடை செய்யப்படுவதற்கு முன்னர் பிரிட்டிஷ் கொலம்பியாவிற்கு வந்தனர். இதன் பின் இந்த மக்கள் தொகை விரைவில் 2,000 ஆகக் குறைந்தது. அப்போது ஆழ்ந்த இனப்பாகுபாடு இருந்த போதிலும், சீக்கியர்கள் விரைவாக பிரிட்டிஷ் கொலம்பியாவில் மத நிறுவனங்களை நிறுவினர்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருக்குலைந்த...

புத்துறை கடற்கரை ஓடைப் பகுதியில் (ஆற்றுவாய்) நேற்று மீனவர்களால் குறித்த சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சிலாவத்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,285)

## நீதிபதிக்கு...

கள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தான் வகித்த பதவிகள் அனைத்தையும் துறந்து உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறுவதாக அறிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டதால் அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

உண்மையில், அவருக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டதா, அவ்வாறு காணப்பட்டால் அது யாரால் விடுக்கப்பட்டது, அதனுடன் தொடர்புடைய தரப்புக்கள் யாவை என்பன தொடர்பில் விரிவான விசாரணையை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

நீதித்துறையின் சுயாதீனத்தையும், நன்மதிப்பையும் உறுதிப்படுத்துவதற்காக இந்தச் செயற்பாடு மிகவும் அவசியமாக உள்ளது.

ஆகவே குற்றப்புலனாய்வுப் பிரிவு இந்த விடயத்தில் தாமதமின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எழுத்து மூலமான கோரிக்கையையும் அனுப்பி வைக்கவுள்ளது என்றார். (ம-7)

## சமூக ஊடகங்...

முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள்தொடர்பில்கொண்டுவரப்படவுள்ள சட்டமூலம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சமூக ஊடகங்களை தணிக்கை செய்யக்கூடாது. விமர்சனம் செய்யும் உரிமை அனைவருக்கும் உள்ளது.

என்னைப் பற்றி எதனையும் கூறட்டும். எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் சமூக ஊடகங்களுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன, கட்சியின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொலிஸ்...

காப்பு குறைக்கப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. அனைத்து நீதிபதிகளுக்கும் வழங்கப்பட்ட அதே பாதுகாப்பு அவருக்கும் வழங்கப்பட்டதாக தெரிவித்தார். (ம-7)

## யாழில்...

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கூடிய இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் தேசிய கட்சி உள்ளிட்ட பிரதிநிதிகள் கூடி இந்த முடிவை எடுத்தனர்.

இதன்படி எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மிகப் பெருமெடுப்பில் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

யாழ்.மருதனார்மடத்தில் இருந்து யாழ்.நகர் வரை மனித சங்கிலி போராட்டம் நடத்தப்படவுள்ளது.

பின்னர் முல்லைத்தீவை முடக்கி போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதற்கான திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அத்துடன் ஐ.நா மற்றும் சர்வதேச நாடுகளின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டது. (ம-7,33,104)

## இராஜதந்திரி...

முல்லைத்தீவு நீதவான் பதவி விலகல் தொடர்பில் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய தகவலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

முல்லைத்தீவு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா நேற்று முன்தினம் தமது பதவியிலிருந்து விலகி இலங்கையை விட்டு வெளியேறியிருந்தார்.

இலங்கை நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்துக்கு சரவணராஜா இந்த கடிதத்தை கடந்த 23ஆம் திகதி அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பான கடிதம் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஐந்து வழக்குகளுக்கு அவர் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தமக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தால் ஒரு நீதிபதியாக அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சரவணராஜாவுக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி கடந்த வாரம் கொழும்புக்கு பயணம் செய்திருந்ததாகவும் அவரது வாகனத்தை விற்பனை செய்துள்ளதாகவும் விஜேயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

சரவணராஜாவின் கொழும்புக்கான பயணத்தின்போது அவர் மேற்குலக நாடுகளின் தூதுவர்களையும் சந்தித்துள்ளதாக நீதி அமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் தாம் தனிப்பட்ட விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

சாவகச்சேரியில் மெகா அதிர்ஷ்டம் தொடர்கிறது...
- க.பிரதாஸ் விற்பனை முகவரூடாக சாவகச்சேரி பிரதேசத்தில் அடுத்தடுத்து பரிசுகள்.
- மக்கள் மனம் வென்ற மஹஜன சம்பத ரிக்கெட்டின் மூலம் 26.09.2023 அன்று ஒரு இலட்சம் வெற்றி.
- 27.09.2023 அன்று நாற்பது கோடிக்கும் அதிகமான சுப்பர் பரிசுடைய கோடிபதி கப்ருக ரிக்கெட் மூலம் இரண்டு இலட்சம் வெற்றி.
- அடுத்த விசேட சீட்டிழுப்பு மெகா பவர் 12.10.2023 அன்று நடைபெறும் 40 கோடிக்கும் அதிகமான சுப்பர் பரிசு வெற்றி வாய்ப்புக்கான ரிக்கெட்டுக்கு எம்மை நாடவும்.
'யாழ்.மாவட்டத்தின் அதிகூடிய சுப்பர் பரிசு வெற்றி முகவர்'
K.பிரதாஸ்
சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக (C-7348)

தன நிதானய
திகதி - 2023.09.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1282
J 36 67 68 76 J
43836

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3494
சீட்டிழுப்பு திகதி 29.09.2023
X 19 45 72 76
X 32897

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.29
சீட்டிழுப்பு இலக்கம் 561
கும்பம் 04 15 41 47 கும்பம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/29
சீட்டிழுப்பு இலக்கம் 5252
C 7 6 3 9 1 1

மெகா பவர்
திகதி 29/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1600
D 15 13 44 46 79
74244

லக்கி 7
திகதி 29.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0078
L7 இலக்கம் 1 3
கடகம் 6 6 2 6 8 0

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2226 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.29 தினம் வெள்ளிக்கிழமை
13 31 41 44 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,495,404.40
90003 239

சனிதா
2023.09.29 வெற்றி வாரம் 4387 வர்ணம் செம்மஞ்சள்
12 24 28 52 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,013,132.00
60687 883

சசிரி
382 2023.09.29 புச்சை
08 27 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,927,360/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3938 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.29 தினம் வெள்ளிக்கிழமை
13 31 41 54 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,468,932/-
32733 751

சுபிர்சா
2023.09.29 வெற்றி வாரம் 1402
L 18 16 25 39 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 445,800,284.20
43084 254

அட கோட்டிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2052
சீட்டிழுப்பு திகதி : 2023.09.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,008,712/-
08 28 45 68 Y
35101 125

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7317)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

**பஸ் சேவை**

AIRPORT PICK UP DROP SERVICE



யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=

(17019)

T.P: 077 544 8503

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete mixer) மற்றும் இத்தாலியிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும்(Hoist) எம்மிடம் உத்தரவாதத்துடனும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (குறிப்பு - இந்தியா மற்றும் தாய்லாந்து கொங்கிறீற் மிக்சர் எம்மிடம் மட்டுமே.)



ஆர்க் என்ரபிறைசஸ்
102, K.K.S, வீதி,யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள், A9 வீதி. 070 191 3571
Hot Line : 071 535 7799/ 071 973 9917

(17281)

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு



- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

(C-7349)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777

## புறொய்லர் வளர்ப்பு

இலாபமடைய வேண்டுமா?
எம்மிடமிருந்து...



- ☐ புறொய்லர் குஞ்சுகள்
- ☐ தீவன வகைகள்
- ☐ சகல மருந்துகள்
- ☐ தொழில்நுட்ப ஆலோசனைகள்
- ☐ சந்தைவாய்ப்பு
- ☐ நிதி ஆலோசனைகள்

ஆகியவற்றை பெற அழைக்கவும்

(17286)

077 581 0149

## தேவை

பிரபல விசா ஆலோசனை நிறுவனம் ஒன்றிற்கு

- ♦ UK
- ♦ Canada
- ♦ Europe Countries

இவற்றிற்கு விசா சம்பந்தமாக அனுபவம் உள்ளவர்கள் தேவை. (ஆண்/பெண்)
விண்ணப்பங்களை நிரப்ப கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

(17284)

Telephone - 071 415 0995
021 222 5686

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.



Srilankan Visa Extension மற்றும் Passport வழங்கல் இலங்கை விசா நீடிப்பு செய்து தரப்படும்.

(C-7348)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS
0777-068-777

## தேவை

யாழை அண்மித்த சிற்றுண்டிசாலைக்கு சப்ளையர் தேவை.
சம்பளம் - 45,000/= (மதிய உணவு இல்லாமல்)
37,500/= (மதிய உணவுடன்)
வாரம் 1 நாள் விடுமுறை
வயது எல்லை 30 - 55

(17288)

077 247 3676

## வேலையாட்கள் தேவை

- அலுவலக உதவியாளர் (மோட்டார் சைக்கிள், லைசன்ஸ் உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.)
- தொழில்நுட்ப அலுவலர் (T.O)
- கணிய அளவையியலாளர் (QS பயிலுனர்)

திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை காலை 8.30 - மாலை 5.00 மணிவரை

(17287)

Royalbuilders1983@gmail.com
T.P : 077 210 0749

## கொழும்பு விலையில்

**யாழ்ப்பாணத்தில் கோழிகள் விற்பனைக்குண்டு**



- புறொயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்க்கோழி, சேவல், விறாத்து குஞ்சு முட்டை இவை அனைத்தும்.
- மலிவான விலையில் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வழங்கப்படும்.
- 33 வருட கால பூர்த்தியை முன்னிட்டு இன்று முதல் எமது கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
- வியாபாரிகள், ஹோட்டல் தேவைகளுக்கு விசேட விலைக்கழிவிலும் கொள்முதல் செய்து கொடுக்கப்படும்.
- எமது சகல கிளைகளிலும் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், பேரன்ஸ் 1150/=

(17289)

தொடர்பு

| | |
|---|---|
| **நியு சிற்றி பாம் நியு சிற்றி கோழிக்கடை**<br>இல.08, குருநகர், மீன் மாக்கெற், யாழ்ப்பாணம். | **நியு சிற்றி கோழிக்கடை**<br>இல.10, மீன் மாக்கெற், நாவாந்துறை, யாழ்ப்பாணம். |
| **நியு சிற்றி கோழிக்கடை**<br>இல.7, பண்ணை மீன் மாக்கெற், யாழ்ப்பாணம் | **நியு சிற்றி கோழிக்கடை**<br>இல.3, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். |

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.

(17282)

077 728 6061

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பின்புறமாக கண்ணகை அம்மன் கோவிலிற்கு தெற்கு புறமாகவும் வெள்ளெருக்கு பிள்ளையார் கோவிலிற்கு செல்லும் வீதியில் நல்ல அயல் சூழலில் 6 பரப்பு சதுர காணி விற்பனைக்கு (2 பரப்பாகவும் கொடுக்கப்படும்)

(17291)

076 654 5987

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு
077 623 4204
076 755 8606
077 076 0389

(17289)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் யோகநாதன் யோகம்மா**

பிறப்பு 27.11.1932 இறப்பு 10.10.2022

எங்கள் குலதெய்வமே அம்மா!
ஆண்டு ஒன்று ஆகியும் உங்கள்
முகம் காணவில்லை? உங்கள் கடமை
செய்த மகனையும் கைவிடாமல்
கூட்டிச் சென்றீர்களே? அம்மா
உங்கள் இருவரது முகமும் எங்கு
காண்போம் என்று தெரியாமல் தவிக்கிறோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

(17283)

134, புங்கன் குளம் சந்தி,
கண்டி வீதி, அரியாலை. 077 553 2876

இங்ஙனம்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபன ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org